பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!
தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி. 22839 — 34238

செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4595 1984 ஜூன் 29 வெள்ளிக்கிழமை ★ ★ ★ දිනපති

அம்பிகா!
உங்களை
அழைக்கின்றாள்!
நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
Ambiga
Jewellers
77, SEA STREET.
COLOMBO-11.
PHONE: 22839 - 34238.

பல்கலைக்கழக துப்பாக்கிச் சூட்டு விவகாரம்:

# பிரதமரின் அழைப்பை 4 கட்சிகளும் ஏற்றன

## நாளை அனுராதபுரத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 29

பல்கலைக்கழக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக, பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த, நான்கு எதிர்க்கட்சிகள் சம்மதம் தெரிவித்திருக்கின்றன. அனுராதபுரத்தில் வைத்து நாளை சனிக்கிழமை பிற்பகல் 2,30 மணிக்கு தன்னைச் சந்திக்குமாறு பிரதமர் விடுத்த அழைப்பை அக்கட்சிகள் ஏற்றுள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மஹாஜன எக்சத் பெரமுன, ஸ்ரீலங்கா மஹாஜன கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவையே இந்த நான்கு கட்சிகளும் ஆகும். இக்கட்சிகள், பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் அளிக்குமாறு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தன என்பது தெரிந்ததே.

பிரதமருடன் நடத்தப்படும்

* துப்பாக்கி சூட்டுக்குப் பலியான இரண்டு மாணவர்களின் மரணம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

* பல்கலைக்கழகத்திலிருந்து, பொலீஸ் நிலையம் அகற்றப்பட வேண்டும்.

* மூடப்பட்டிருக்கும் பல்கலைக்கழகங்கள் உடனடியாக திறக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில்

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதே சிறந்த மார்க்கம் என பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

(து—க—ர)

# ஹோட்டலில் குண்டுவெடிப்பு

## ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூன் 29

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் நேற்று குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் அங்கிருந்த பெண் ஊழியர் ஒருவர் உயிர் இழந்தார்.

(க)

## தலைமன்னார் ரயில் நேரம் மாற்றம்

கொழும்பு, ஜூன் 29

தலைமன்னார் ரயில் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து இரவு 8-50 மணிக்கு புறப்படும் 67 ஆம் இலக்க ரயில். அடுத்தநாள் காலை 5-30 மணிக்கு தலைமன்னார் ரயில் நிலையத்தை சென்றடையும்.

தலைமன்னாரிலிருந்து அடுத்த நாள் காலை 8-30 மணிக்கு புறப்படும் 68ஆம் இலக்க ரயில் அதேதினம் மாலை 4.15 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும்.

இந்த நேர மாற்றங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி தொடக்கம் அமுல் செய்யப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

(து-ய)

சோமண்ணை



இவையெல்லாம் திரைக்குத் தான் புதிய படங்கள் டெக்குக்கு எல்லாம் பழைசு தான் பாருங்கோ.

## கண்நோய்

மூதூர் ஜூன் 28

மூதூர் பகுதியில் கண் நோய் வேகமாகப் பரவி வருகிறது.

மூதூர் அரசினர் வைத்திய சாலையிலும், தனியார் வைத்திய நிலையங்களிலும் பலர் இதற்காக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(து-186)

# 1000 ரூபா போலி நோட்டு பெருமளவு புழக்கத்தில்

## பத்திரிகையாளர் மாநாட்டில் தகவல்

## 1 நோட்டை 5 நாளில் வரைய முடியுமாம்

கொழும்பு, ஜூன் 29

ஆயிரம் ரூபா போலி நோட்டுகள் புழக்கத்தில்

விடப்பட்டு இருக்கின்றன.

போலி நோட்டுகளை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் ஆகும். இதற்கு 20 வருடம் வரை சிறைத் தண்டனை வழங்க முடியும்.

பொதுமக்கள் போலி நோட்டுகள் குறித்து மிகவும்

டும். போலி நோட்டுகள் எனக் கண்டால், உடனடியாக அது பற்றி அண்மையில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கு அவர்கள் அறிவிக்க வேண்டும்.

* இரகசியப் பொலீஸ் இயக்குநர் நாயகம் திரு. அமரசேன ராஜபக்ஷ பத்திரிகையாளர்

# ஜனாதிபதி நாளை

கோள் விடுத்திருந்தன என்பது தெரிந்ததே.

பிரதமருடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையின் போது, கீழ்காணும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்படுமென மேற்படி நான்கு கட்சிகளும் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளன.

* பல்கலைக்கழக அசம்பாவிதங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட மாணவர்களை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்ய வேண்டும்.

கலைக்கழகங்கள் உடனடியாக திறக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது.

## கம் உதாவ: ஜனாதிபதி பிரதம அதிதி

கொழும்பு, ஜூன் 29

கிராம எழுச்சி (கம் உதாவ) ஆறுவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில், ஜனாதிபதியும், அவரின் பாரியாரும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

ஜூலை 3ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இந்த வைபவம் ஆரம்பமாகும்.

ஜூன் 23ஆம் திகதி ஆரம்பமாகிய கிராம எழுச்சிக் கொண்டாட்டங்களையும், பொருட் காட்சியையும் அநுராதபுரத்தில் தினசரி ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டு வருகின்றனர். (த-7)

## ஈகைத் திருநாள் சிறப்பிதழ் நாளை

தினபதி ஈகைத் திருநாள் சிறப்பிதழ் நாளை (30-6-84) வெளிவருகிறது. பக்கங்கள் 14. உங்கள் பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள். (த)

# ஜனாதிபதி நாளை டில்லி வருகிறார்

## ஞாயிறன்று இந்திராவுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 29

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், அவரது பாரியாரும், அமெரிக்க, பிரிட்டிஷ் விஜயத்தை முடித்துக் கொண்டு, நாளை சனிக்கிழமை இந்தியா வந்து சேர்வர்.

புதுடில்லி விமான நிலையத்தில் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்க, இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

ஜனாதிபதியும் குழுவினரும் ஜூலை 2ஆம் திகதிவரை புதுடில்லியில் தங்கியிருப்பார்.

ஜூலை 2ஆம் திகதி திங்கட்கிழமை மாலை, அவர் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்படுவார்கள்.

சனிக்கிழமை புதுடில்லி வந்து சேரும் தம்பதியரை வரவேற்கும் முகமாக, விமான நிலையத்தில் இராணுவ அணிவகுப்பு இடம் பெறும். மரியாதைக் குண்டுகளும் தீர்க்கப்படும்.

விமான நிலையத்திலிருந்து அவர்கள், அரச பவனியில், ராஷ்டிரபதி பவனுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை, ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவை வளர்க்கும் வகையில் இப்பேச்சுவார்த்தை அமையும் என இந்திய வானொலி அறிவித்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றியும் இரு தலைவர்களும் பேசுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றுவதற்காக தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, வெளிவிவகார அமைச்சின் இயக்குநர் நாயகம் திரு. பென் பொன்சேகா, தென் ஆசியப் பிரிவு அதிபர் திரு. ஜே. சி. ராஜபக்ஸ, தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் சேபால ஆட்டிகல, அமைச்சரவைச் செயலாளர் திரு. ஜி. ஜீ. பி.

(2 ஆம் பக்கம் பார்க்)

## இந்தியாவிலிருந்து
# 10 புதிய படங்கள் 6 பழைய படங்கள்

கொழும்பு, ஜூன் 29

இந்தியாவில் இருந்து 10 புதிய தமிழ் திரைப் படங்களை இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் 6 பழைய தமிழ் திரைப்படங்களும் தருவிக்கப்படும்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன இயக்குநர் கலாநிதி கே. எஸ். நடராஜா, திரைப்பட அரங்கு உரிமையாளர் திரு. எஸ். நமசிவாயம் ஆகியோர் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுவிட்டு நேற்று நாடு திரும்பினர்.

இறக்குமதி செய்யப்பட இருக்கும் புதிய படங்கள் வருமாறு:—

வெள்ளை ரோஜா, நீதிபதி, விதி, தூங்காதே தம்பி தூங்காதே, துடிக்கும் கரங்கள், பூவிலங்கு, நீங்கள் கேட்டவை, நான் பாடும் பாடல், சிவப்பு சூரியன், தாய் இல்லாமல், நானில்லை.

பழைய படங்கள் பின்வருமாறு:—

ஆயிரத்தில் ஒருவன், குடியிருந்த கோயில், புதிய பறவை,

(2 ஆம் பக்கம் பார்க்)

## தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் பதவி ஏற்பு

கொழும்பு, ஜூன் 29

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, நேற்றுக் காலை, பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் பதவியேற்றார்.

அநுராதபுரத்தில் உள்ள "கம் உதாவ" செயலகத்தில் வைத்து, பிரதி சபாநாயகர் திரு. நோர்மன் வைத்தியரத்ன முன்னிலையில் அவர் பதவி பிரமாணம் செய்து கொண்டார். (த-க)

## சைவ நூல் வெளியீடு

கொழும்பு, ஜூன் 29

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் இந்து சமயத் திணைக்களத்தினால் நூலாக்கப் பெற்ற, வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா வீ. ஓ. எல். எழுதிய "மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்" நூல் வெளியீட்டு விழா, ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆனைப்பந்தி உயர்தர பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக பிரதேச அபிவிருத்தி, இந்துசமய, இந்துகலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரை கலந்து கொள்வார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அந்தோனி முத்து தலைமை வகிப்பார்

நூல் முதற் பிரதியை அமைச்சர் இராசதுரையிடமிருந்து மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. பாலகிருட்ணர் வாங்குவார். ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தஜீ ஆசியுரை வழங்குவார். (க)

# விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு செயலகம் இன்றுடன் மூடப்படுகிறது

கொழும்பு, ஜூன் 29

விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலகம் இன்றுடன் மூடப்படுகிறது.

கொழும்பு, பௌத்த லோக்க மாவத்தை "குயீன்ஸ் கிளப்" கட்டடத்தில் விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு அலுவலகம் கடந்த ஆறு வருடங்களாக இயங்கி வந்தது தெரிந்ததே.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இதன் தலைவராக முன்னாள் நீதியரசர் திரு. ஜே. ஜி. டி. வீரரத்ன பணியாற்றினார்.

நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தாவும், முன்னாள் நீதியரசர் திரு. கே. வி. ஈ. டி அல்விஸ்ம் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக இருந்தனர்.

ஆணைக்குழு மூவாயிரத்துக்கும் மேலான முறைப்பாடுகளை

(2 ஆம் பக்கம் பார்க்)

முடியும்.

பொதுமக்கள் போலி நோட்டுகள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்

குநர் நாயகம் திரு. அமரசேன ராஜபக்ஷ பத்திரிகையாளர்

(2 ஆம் பக்கம் பார்க்)

# மட்டக்களப்பு அம்பாறைமாவட்டங்களிலும் தமிழ்மொழி விரைவில் அமுல்

கொழும்பு, ஜூன் 29

மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் தமிழ் மொழி உபயோகத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையின் பணிப்பின் பேரில் தமிழ் மொழி அலுவல்கள் பணிப்பாளர் திரு. எம். இராசநாயகம் மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் சென்று ஆய்வுகளை நடத்தினர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. அந்தோனிமுத்து. அம்பாறை அரசாங்க அதிபர் திரு. ஆரியரத்ன ஆகியோரை தமிழ் மொழி உபயோகத்தை முற்றாக அமுல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

மாவட்டக் கச்சேரிகளிலும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் தமிழ் மொழியை அமுலாக்குவதில் உள்ள சிரமங்கள், தேவைகள் என்பனவற்றை அவர் கேட்டு அறிந்தார்.

ஒவ்வொரு மாவட்டக் கச்சேரிகளிலும், தமிழ் மொழியைத் துரிதமாக அமுல் நடத்துவதற்கு, ஒருவரிடம் முழுப் பொறுப்பையும் கையளித்து செயல்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

தமிழ் மொழியை அமுலாக்குவதில் தங்களுக்கு உள்ள வசதிக் குறைகளை அரசாங்க அதிபர்கள் பணிப்பாளர் திரு. இராசநாயகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது, அவற்றை மிக விரைவில் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று திரு. இராசநாயகம் உறுதியளித்தார். (க)

## நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.23 |
| ஸுபஹு | — காலை | 4.38 |
| சூரிய உதயம் | — காலை | 5.58 |
| ளுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பி.ப. | 3.42 |
| மஃரிபு | — மாலை | 6.30 |
| இஷா | — இரவு | 7.50 |

# ஜூலை போன்று மற்றும் ஒரு வன்செயலுக்கு முயற்சி

## இரகசியப் பொலீஸாருக்குத் தகவல்

கொழும்பு, ஜூன் 29

கடந்த வருடம் ஜூலை மாதத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் போன்று மீண்டும் நாட்டில் ஒரு வன்செயலைத் தூண்டிவிட தீய சக்திகள் முயன்று வருகின்றன என்று இரகசியப் பொலீஸாருக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக சதித் திட்டம் மேற்கொண்டு வரும் ஒரு கோஷ்டியினர், கொழும்புக்கு வந்து இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றனர் என்று தெரியவந்திருக்கிறது.

இதே கோஷ்டியினரே சமீபத்தில் மாணவர்களைத் தூண்டிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இக்கோஷ்டியினர் தற்பொழுது அரசாங்க, தனியார் ஊழியர்களையும் வேலை நிறுத்தத்துக்கு தூண்டி வருகின்றனராம்.

இவர்களை கைது செய்யும் முயற்சியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர். (த-ர)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

## லொறி விபத்தில் 15 மாடுகள் பலி

அப்புத்தளை, ஜூன் 28

அப்புத்தளையில் லொறி ஒன்று விபத்துக்குள்ளாகியதால் அதில் ஏற்றிச் சென்ற 15 மாடுகள் உயிரிழந்தன.

அப்புத்தளை ஹல்பெத்த பாதையில் இப்பரிதாப சம்பவம் நடைபெற்றது.

மாடுகள் விபத்துநடந்த இடத்திலேயே மரணமாயின.

லொறியைச் செலுத்தி வந்த சாரதி காயங்களுக்குள்ளானர்- இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட லொறி தொடர்பாகவும் அதில் ஏற்றிவந்த மாடுகள் தொடர்பாகவும் அப்புத்தளை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (எ–100)

தினபதி
சிறு விளம்பரம்

## இஸ்லாமிய கீதம்

திருக்குர்ஆன், புர்தா ஷரீப், ...த்து மௌலூத், முஹியத்தீன் மாலை, ஐய்..ப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி) சரித்திரம், நோன்பின் சிறப்பு, நூறு மஸாலா, காரைக்கால் தாவூத் ஈ. எம். ஹனீபா, சேக் முஹம்மது, ஹுசைன்தீன் மற்றும் பலர் பாடிய இஸ்லாமிய கீதங்கள், நாயகத்தின் பிறப்பின் சிறப்பு போன்றவை, பதிவு செய்யப்பட்ட கஸெட்கள் வாங்க சிறந்த இடம்.
Twinkle, P1, Front Street. Colombo 11.

031342

அறிவித்தல்

எனதிலக்கம் 3/2/5/6/37/76
1984 – 05 – 31
கம்புஹா மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில்.

1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப் பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம்

அறிவித்தல்

இங்கு கீழ் தரப்பட்டுள்ள உப...

# 5,000 பேரில் 90 பேரே மலையகத் தமிழர்

## இந்த நிலைமை மாறவேண்டும் என்கிறார் அமைச்சர் தொண்டமான்

ஐயாயிரம் பட்டதாரி மாணவர்கள் படிக்கும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆக 90 பேர் மட்டுமே மலையக தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளாக இருக்கின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும்.

ஹெல்பொட வடக்கு தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசிய கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இவ்வாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:—

இன்று தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பல பெற்றோர் பாடசாலைக்குச் செல்லும் தமது பிள்ளைகளை தோட்டத்தில் வேலைக்கு அமர்த்த முயற்சிக்கின்றனர்.

தற்காலிகமாக கிடைக்கும் சொற்ப ஆதாயத்திற்காக உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்தை நாசமாக்கி விடாதீர்கள். அவர்களைத் தொடர்ந்து பாடசாலைக்கு அனுப்பி சிறந்த கல்விமான்களாக மாற்றுங்கள்.

அண்மையில் நான் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற போது ஐயாயிரம் பட்டதாரி மாணவர்கள் படிக்கும் இடத்தில் ஆக 90 பேர் மட்டுமே மலையகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

இது நாம் தலைகுனிய வேண்டிய ஒரு விடயம்.

உங்களுக்குக் கிடைத்திருக்கும் மேலதிக ஊதியத்தைக் குடிப்பதற்கும், புகைப்பதற்கும் வீணுக்கச் செலவிடாதீர்கள்.

உங்கள் பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிடுங்கள். அவர்களின் எதிர் காலத்திற்காக சேமித்து வையுங்கள்-

இ- தொ- கா- அங்கத்தவர்களின் மாதாந்தச் சந்தாவை அதிகரிக்கத் தீர்மானித்திருக்கிறது. அதிகரிக்கப்பட்ட இந்த தொகை தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு தொழிற் பயிற்சிகளை அளிக்கவும், சுயதொழில் முயற்சிகளை ஏற்படுத்தவும் செலவிடப்படும்.

ஜப்பானிய தொழிற் சங்கத்தின் நன்கொடையால் கொட்டகலையில் பாரிய கைத் தொழில் பேட்டை அமைக்கப்பட்டிருக்கிறது.

இதில் முற்றிலும் மலையகத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கே முதலிடம் வழங்கப்படும்.

இன்று பின்தங்கிய நிலையில் இருக்கும் நமது சமுதாயம் எதிர்கால சந்ததியினருக்குக் கல்வியை ஊட்டி, மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதின் மூலம் மட்டுமே விமோசனம் பெற முடியும்.

மேலும் மலையக இளைஞர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தக்க பயிற்சிகளைப் பெறவும் வேண்டும்.

இவ்வாறு திரு. தொண்டமான் கூறினர்.

இந்த பரிசளிப்பு வைபவத்தில் நுவரெலியா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. டி. வி. மாரிமுத்து ஹெல்பொட தோட்ட அதிகாரி திரு. என். செனவிரத்ன ஆகியோரும் பேசினர்கள். (எ–ய)

## மெதடிஸ்த திருச்சபையின் 170 ஆவது ஆண்டு நிறைவு விழா

கொழும்பு, ஜூன் 29

இலங்கை மெதடிஸ்த திருச்சபை, அதன் 170 ஆவது ஆண்டு நிறைவு விழாவை இன்று 29 ஆம் திகதி கொண்டாடுகின்றது.

பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்து திருச்சபையில் ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இங்கிலாந்து திருச்சபையில் போதகராக விளங்கிய வண. சாமுவேல் வெஸ்லி அடிகளாரின் பிள்ளைகள் ஜோன் வெஸ்லி, சார்ள்ஸ் வெஸ்லி ஆகிய இருவருமே இந்த மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்தனர்.

இவர்களின் முயற்சியால் மெதடிஸ்த திருச்சபை உருவாகியது.

இற்றைக்கு 170 ஆண்டுகளுக்கு முன்னர் மறை பரப்பும் பணியை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 5 திருப்பணியாளர்கள் இலங்கை வந்தடைந்த தினமே இன்று கொண்டாடப்படுகிறது. (எ)

கேகாலையில்

## வருடாந்த பொசன் பெரஹரா

### வாகனப் போக்குவரத்தில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 29

கேகாலையில் நாளை 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும் வருடாந்த பொசன் பெரஹராவை முன்னிட்டு, கொழும்பு — கண்டி வீதியில் வாகனப் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

அன்றைய தினம் மாலை 6 மணி முதல் மறுநாள் அதிகாலை 3 மணிவரை இந்த நடைமுறை அமுலில் இருக்கும் என பொலீஸ் தலைமையகத்தின் பொலீஸ் பொதுமக்கள் தொடர்புப் பிரிவின் பொறுப்பதிகாரி அறிவித்திருக்கிறார்.

★ மூடி இருக்கும் பகுதி:

கொழும்பு – கண்டி வீதியில், தெற்கில் ரன்வலை சந்தியில் இருந்து வடக்கில் கறந்துபோன சந்திவரை வாகனப் போக்குவரத்துக்கு இடமளிக்கப்பட மாட்டாது. கண்டியிலிருந்து புறப்படும் வாகனங்கள் இந்த வழியாகச் செல்ல முடியாது.

★ வாகனங்களுக்குத் திருப்பி விடப்பட்டிருக்கும் வழி:—

★ கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் பஸ்கள், லொறிகள். தனியார் பஸ்கள் தவிர்ந்த ஏனைய சகல வாகனங்களும், ரன்வலையிலிருந்து சேர் பிரான்ஸில் மொலமுரே மாவத்தை வழியாக, புளத்கோபிட்டிய வழி பரகம்மான வழி எக்கிரியாகல, சிறிமத் எட்வின் விஜயரட்ன மாவத்தை ஊடாக மீபிட்டிய சந்தியில் கொழும்பு – கண்டி வீதி வழியாகச் செல்ல வேண்டும்.

★ இதேபோன்று கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி வரும் பஸ்கள், லொறிகள், தனியார் பஸ்கள் தவிர்ந்த ஏனைய சகல வாகனங்களும் கொழும்பு — கண்டி வீதியில் மீபிட்டிய சந்தியில் சிறிமத் எட்வின் விஜயரட்ண மாவத்தை ஊடாக திருப்பி விடப்படும்.

மேலே குறிப்பிட்ட வழிகள் ஊடாக ரன்வலை சந்தியில் கொழும்பு — கண்டி வீதியை வந்தடைய வேண்டும்.

★ கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் சகல பஸ்களும், லொறிகளும், ரன்வலை சந்தியில் திருப்பி விடப்படும்.

பொல்காவலை வீதி, இம்புல்கஸ்தெனிய, ஹல்பிட்டிய, ஆந்திரமட ஹிரிவாதுன்ன ஊடாக கரந்துபொன சந்தியை அடைந்து கொழும்பு – கண்டி வீதியில் செல்ல வேண்டும்.

★ இதேபோன்று கண்டியிலிருந்து கொழும்பு வரும் சகல பஸ்களும், லொறிகளும் கரந்துபொன சந்தியில் திருப்பி விடப்படும்.

ரன்வலை சந்தியை அடைந்து கொழும்பு – கண்டி வீதி வழியை அடைந்து கொழும்பு – கண்டி வீதி வழியை அவை சென்றடைய வேண்டும்.

★ மகாவலி அதிகார சபைக்குரிய சகல பாரிய வாகனங்களும் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் செல்லும் வழியில் அம்பேபுஸ்ஸ சந்தியில் குருநாகல் வழியாக திருப்பி விடப்படும்.

இதேபோன்று கொத்மலை, விக்டோரியா திட்டங்களிலிருந்து வரும் வாகனங்கள் பேராதனையிலும் கண்டியிலும் திருப்பி விடப்பட்டு குருநாகல் வழியாக கொழும்புக்குச் செல்ல அனுமதிக்கப்படும் (எ–ந)



"நிக்ரா" என்னும் கப்பலில் ... வெங்காயத் தட்டுப்பாட்டை ...

## விசேஷ ஜூரி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை செய்திருந்தது.

விசாரணைகளின் கோவைகள், அறிக்கைகள், ஆவணங்கள் யாவும் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் வைக்கப்படும். விசாரணைகளின் அறிக்கைகள் அச்சுரு பெறும்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணையின் பின்னரே, முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, முன்னாள் நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, முன்னாள் நீதி அமைச்சின் செயலாளர் திரு. நிகால் ஜெயவிக்கிரம ஆகியோர் குடியுரிமைகளை இழக்க நேரிட்டது.

இதேவேளை, காலஞ்சென்ற ஹெக்டர் கொப்பேகடுவ, முன்னாள் கம்பளை எம். பி. திரு. டி. எம். ஜெயரத்ன ஆகியோர் நிரபராதிகளாக விடுவிக்கப்பட்டதும் இந்த ஆணைக்குழுவினால் தான்.

மேலும் இன்றைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பியாக இருந்த பொத்துவில் முதலாவது எம். பி. டாக்டர் எம். ஏ. எம்.

7 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

இங்கு கீழ் தரப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணிகளை அரசாங்கம் பொறுப்பேற்க உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்கட்கு 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி 301/15 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேஷ வர்த்தமானி பத்திரிகையைப் பார்க்கவும்.

உப அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு:—
வத்தல.

கிராமம் அல்லது ஊர்:—
பல்லியவத்த

அமைப்பு:—
ஹந்தல சிறு நகரசபை எல்லையினுள் பிரிவு இலக்கம் 3, பல்லியவத்த.

காணியின் பெயர்:
மாதன்கஹவத்த, கலாகஹவத்த.

நில அளவைப் பட இலக்கம்:—
கம்: 448

நிலத் துண்டிலக்கம்:—
1 — 11

ஏ. எல். எஸ். மல்வன்ன,
கம்பஹ மாவட்டக் காணி அலுவலகர்
1588

## இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களம் புகையிரதக் கடவையைப் புதுப்பித்தல்

என். 613

பிரதான புகையிரதப் பாதையில் களனி — உனுப்பிட்டி ஆகிய புகையிரத நிலையங்களுக்கு இடையில் 03 மைல் 50 சங்கிலியில் அமைந்துள்ள புகையிரதக் கடவையைப் புதுப்பிக்கும் வேலைகள் 30.06.1984, 01.07.1984 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்படும்.

இப் புகையிரதக் கடவை வாகனப் போக்கு வரத்திற்காக 30.06.1984 அன்று 07-00 மணியிலிருந்து 20.00 மணிவரையும், பின்னர் 01.07.1984 அன்று 05-00 மணியிலிருந்து 16-00 மணிவரையும் ஒரு பகுதி மூடப்பட்டு இருக்கும். 30.06.1984 அன்று 20.00 மணியிலிருந்து 01.07-1984 அன்று 05.00 மணிவரை இப் புகையிரதக் கடவை வாகனப் போக்குவரத்திற்காக முற்றாக மூடப்பட்டிருக்கும்.

இப் புகையிரதக் கடவை பகுதியாக மூடப்பட்டிருக்கும் போது வாகனப் போக்குவரத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இக் கடவை முற்றாக மூடப்பட்டிருக்கும் போது பியகம வீதி வழியாக வாகனப் போக்குவரத்து திசை திருப்பப்படும்.

ஒப்பம்:
சி. பஞ்சாட்சரவேல்
புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளருக்காக.
1535

வழியாகச் செல்ல முடியாது.
★ வாகனங்களுக்குத் திருப்பி விடப்பட்டிருக்கும் வழி:—
★ கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் சகல பஸ்களும், லொறிகளும், ரண்வலை சந்தியில் திருப்பி விடப்படும்.
பொல்கஹவலை வீதி, இம்புல்

திருப்பி விடப்பட்டு குருநாகல் வழியாக கொழும்புக்குச் செல்ல அனுமதிக்கப்படும்
(எ—ங)



"நிக்நா" என்னும் கப்பலில் இருந்து இறக்கப்பட்ட பெருந்தொகையான பம்பாய் வெங்காய மூடைகளையே படத்தில் காண்கிறீர்கள்.

தற்போது நாட்டில் நிலவும் வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக வெளிநாடுகளிலிருந்து துரிதமாகத் தருவிக்கப்பட்ட வெங்காயத்தினல் கொழும்புத் துறைமுகம் நிறைந்து வழிகின்றதாகக் கூறப்படுகிறது. (எ*—ச)

கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பியாக இருந்த பொத்துவில் முதலாவது எம். பி. டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன், இந்த ஆணைக்குழு முன் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தார்.
(த—ங)

# 1000 ரூபா போ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இரகசியப் பொலீஸ் தலைமையகத்தில் நேற்றுக் காலை பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டிலேயே போலி நோட்டுகளைப் பற்றிய தகவலை திரு. ராஜபக்ஷ வெளியிட்டார்

திரு. ராஜபக்ஷ மேலும் தெரிவித்ததாவது:—

கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை 17 போலி நோட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவர் 5 நாளில் ஒரு நோட்டை வரையக் கூடியவர். அசல் நோட்டை போலவே இது இருக்கும்.

பிரஸ்தாப சந்தேக நபர் இதுவரை (7 ஆயிரம் ரூபா) போலி நோட்டுகளை வரைந்து புழக்கத்தில் விட்டிருக்கிறார்.

போலி நோட்டுகள் கையினல் வரையப்பட்டுள்ளன. சில அச்சிடப்பட்டுள்ளன. போட்டோ பிரதி செய்யப்பட்டு அதன் மீது வர்ணம் தீட்டப்பட்டிருக்கின்றது. இலக்கங்கள் மாறுபட்டவையாக இருக்கும். நீரோட்ட அடையாளம், பாதுகாப்பு நூல், கடதாசி போன்றவற்றில் மூலம் போலி நோட்டை அடையாளம் காண முடியும்.

வரைந்த நோட்டுகளில் வழுக்கல் தன்மை இருக்கும். அசல் நோட்டுகளில் தடிப்பு தன்மை காணப்படும்.

பொதுமக்கள் கவனயீனமாக நடந்து கொண்டால் 1000 ரூபாவை இழப்பதுடன் நீதிமன்றங்களுக்கும் அலைய வேண்டிய நிலை ஏற்படும்.

போலி நோட்டை வைத்திருப்பது, மாற்ற முயல்வது, அச்சிடுவது, வரைவது ஆகியன தண்டனைக்குரிய குற்றங்கள் 20 வருட கடுங்காவல் தண்டனை வழங்க சட்டத்தில் இடமுண்டு.

போலி நோட்டு ஒன்றை வைத்திருந்து அகப்பட்ட சந்தேக நபர் ஒருவருக்கு 14 வருட தண்டனை காலி மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்கிறது.

கண்டி, தங்காலை, குருநாகல், கொழும்பு ஆகிய பகுதிகளில் 1000 ரூபா போலி நோட்டுகள் புழக்கத்தில் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இப்படி அவர் தெரிவித்தார்.

உதவி பொலீஸ் அதிபர் திரு. புண்ணிய டி சில்வா, இன்ஸ்பெக்டர் திரு. கே. தங்கவேலு ஆகியோரும் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (த—மு)

# 10 புதிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டுக்கார வேலன், அலிபபாவும் நாற்பது திருடர்களும், ஸ்ரீராம பக்த அநுமான்.

எம். சரவணன் தயாரிக்கும் புதுமைப் பெண் என்ற படத்தை இலங்கையிலும், இந்தியாவிலும் ஏக காலத்தில் திரையிடவும் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இத்தகவலை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன விளம்பர அதிகாரியும், வானொலி அறிவிப்பாளருமான திரு. கே. எஸ். ராஜா தினபதிக்குத் தெரிவித்தார். (மு)

# ஜனதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமரசிங்க ஆகியோர் ஏற்கனவே புதுடில்லி சென்றுள்ளனர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு உதவியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ், பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன், திரு. ஜி. பார்த்தசாரதீ ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வர். (க)

## தோ. பாடசாலை ஆசிரிய நியமனம்:

# நிராகரிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் விவரம் சேகரிப்பு

கொழும்பு, ஜூன் 29

மலையக தோட்டப் பாடசாலை ஆசிரியர் நியமன நேர்முகப் பரீட்சையின் போது 28 வயதிற்கு மேற்பட்டவர்கள் என நிராகரிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் விவரங்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் திரட்டி வருகின்றது.

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்காவுடன் இலங்கை ஆசிரிய காங்கிரஸ் தூதுக்குழு அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியது.

சம்பந்தப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி கல்வி அமைச்சர், இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. செல்லச்சாமியிடம் கேட்டிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து இ.தொ. கா. தலைமைப் பீடம் இந்த விவரங்களைத் திரட்ட அவ்வப்பகுதிகளில் சில உயர் அதிகாரிகளை நியமித்திருக்கிறது.

நுவரெலியா மாவட்டம்:— திரு. எஸ். இராஜு உதவிப் பொதுச் செயலாளர், திரு. பி. சந்திரசேகரன் —

கண்டி மாவட்டம்:— திரு. எஸ். பி. இராசையா தொழிலுறவு அதிகாரி —

பண்டாரவளை மாவட்டம்:— திரு. பி. சகாதேவன் உதவிக் காரியதரிசி —

கேகாலை மாவட்டம்:— திரு. பி. முருகையா தொழிலுறவு அதிகாரி —

இரத்தினபுரி மாவட்டம்:— திரு. ஏ. எம். டி. இராஜன், அரசியல் காரியதரிசி —

மாத்தளை மாவட்டம்:— திரு. எஸ். இராஜரட்ணம் காரியத் தலைவர்.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களும், கடிதம் கிடைக்காமலும் வேறு தவிர்க்க முடியாத காரணங்களினாலும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டவர்கள் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளும்படி இ. தொ. கா. கேட்டிருக்கிறது. (எ—ய)

## ஹைலண்ட்ஸ் கல்லூரி தமிழ்த் தினவிழா

அட்டன், ஜூன் 29

ஹைலண்ட்ஸ் கல்லூரியின் தமிழ்த் தின விழாவும், கல்லூரி தின விழாவும் இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

விழாவிற்கு பதில் அதிபர் திரு. என். பாலசுந்தரம் தலைமை வகிப்பார்.

மேற்படி விழாவில் அட்டன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. இராஜகோபால், நுவரெலியா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. டி. வி. மாரிமுத்து ஆகியோர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வர். (டை—வ)

## பல்கலைக்கழக மாணவர் மரணம்:

# சமூகப் பிரச்சினைகளுக்கு மனிதாபிமான முறையில் தீர்வு வேண்டும்

## கண்டி பிரதம மாஜிஸ்திரேட் கருத்து

கண்டி, ஜூன் 28

"மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் பூரண நம்பிக்கை கொண்டு, தமது குழந்தைகளை பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி பெற பெற்றோர் அனுப்புகின்றனர். எவ்வளவுதான் வசதிகள் கிடைக்கின்ற போதிலும் சில மாணவர்கள் திருப்தி அடைவதில்லை. இப்படியான சமூகப் பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் தீர்த்து வைக்க வேண்டியது கடமையாகின்றது.

இவ்வாறு கூறினர் கண்டி பிரதம மாஜிஸ்திரேட் திரு. சந்திரதாஸ நாணயக்கார.

பேராதனைப் பல்கலைக் கழக பட்டதாரி மாணவரான எச். பீ. ஏ. பத்மசிறி என்பவரின் மரணம் தொடர்பான விசாரணையின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

காலம்சென்ற பத்மசிறியின் சார்பாக நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளான திருவாளர்கள் லால் விஜேநாயக்க, ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

அவர்கள் முன்னிலையில் திரு. நாணயக்கார மேலும் கூறியதாவது:

"இந்த விசாரணைக்கு இவை பொருத்தமாக இல்லையாயினும் கூட சமூக நலன் கருதி பல்கலைக் கழகப் பிரச்சினையின் மீது எமது கவனம் அதிகரிக்க வேண்டும்.

இது போன்ற விவகாரங்களில் மாணவர்கள் ஏன் ஈடுபடுகிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது.

உணவு, உடை மற்றும் வசதிகள் பூரணமாகக் கிடைக்கும் போது தமது படிப்பை முடித்துக் கொண்டு அமைதியாக வெளியேறாமல், சில மாணவர்கள் ஏன்தான் இப்படிச் செயல்படுகிறார்களோ தெரியவில்லை. ஐந்தாறு பேர் கூடி விட்டதும் தங்களைவிடப் பலசாலிகள் எவருமில்லை என நினைக்கிறார்கள் போலும்.

அண்மையில் நடைபெற்ற கவலை தரக்கூடிய இச் சம்பவத்தில் பேரும் புகழும் மிக்க தொழில் ஒன்றைப் பெறவிருந்த ஒரு மாணவர் தன் உயிரையே இழந்து விட்டார்.

அருமை பெருமையான தாய் தந்தையருக்கும் சமூகத்துக்கும் அவர் இல்லாமல் போய்விட்டார்.

இவ்வாறான சம்பவங்களில் இவர்கள் எப்படி ஈடுபடுகிறார்கள் என்பது குறித்து ஆராய வேண்டும்.

சட்டத்தரணி திரு. லால் விஜேநாயக்க:— பொலீஸார் தலையிடும் பொழுது இந்தக் குழப்பம் அதிகரிக்கின்றது

மாஜிஸ்திரேட்:— பொலீஸார் ஒரு பக்கம் இருக்கட்டும். தாம் கல்வி அறிவு பெற வேண்டிய நாலைந்து வருடங்களை சுமுகமாகக் கழித்து விட்டு பல்கலைக் கழகத்தில் இருந்து சென்று விடலாம் அல்லவா? ஏன் இப்படி குழப்ப விவகாரங்களில் தலையிடுகிறார்கள்.

சட்டத்தரணி திரு. ஜயம்பதி விக்ரமரத்ன:— உலகில் மிகவும் அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் கூட இந்தப் பிரச்சினை இருக்கின்றன.

ஏ. எஸ். பீ. திரு. செனவிரத்ன:— சில நாடுகளில் நடைபெறும் சம்பவங்களைப் போல் நமது நாட்டிலும் செய்து காட்ட அவர்கள் முனைகின்றனர்.

சட்டத்தரணி விஜேநாயக்க:— மாணவர்கள் மத்தியில் விரக்தி காணப்படும் பொழுது வேறு பலவும் இடம்பெறுகின்றன.

ஏ. எஸ். பீ. செனவிரத்ன:— அரசாங்க உயர் பதவிகளுக்குச் சென்ற பின்னர் இந்த நோக்கங்கள் தானகவே மறைந்து விடுகின்றன

மாஜிஸ்திரேட்:— பெற்றோர் மிகவும் அல்லற்பட்டு சொல்லொண்ணாத கஷ்டங்களை அனுபவித்துத் தமது பிள்ளைகளை பல்கலைக் கழகங்களுக்கு உயர் கல்வி பெற அனுப்புகின்றனர்.

அனாவசிய விவகாரங்களால் மாணவர்கள் இறுதியில் இறப்புக்கும் ஆளாக வேண்டி வருகின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் பல்கலைக் கழக மாணவர்கள் தவறான வழியில் இட்டுச் செல்லப்படுவதாகும்.

நாட்டில் உள்ள சட்டங்களை மீற பல்கலைக் கழக மாணவர்களுக்கென விசேட சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதா?

குழப்பம் விளைவிக்கும் மாணவர்களைக் கைது செய்யாமல் இருக்க முடியுமா? இவற்றை நான்எனது தனிப்பட்ட நோக்கிலேயே தெரிவிக்கிறேன்.

ஏ. எஸ். பீ. திரு. செனவிரத்ன: பல்கலைக் கழக மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குள் புதிய ஓர் ஆட்சி முறை இருப்பதாகக் கருதுகின்றனர் போலும். சாதாரண சட்ட திட்டங்கள் பற்றிய நல் அபிப்பிராயங்கள் அவர்கள் மத்தியில் இல்லை.

மாஜிஸ்திரேட்:— "நாட்டின் சட்ட திட்டங்கள் சகலருக்கும் பொதுவானதாகும். கொலையை எவர் புரிந்தாலும் அது குற்றச் செயலே. நான் கூடத் தவறு செய்தால், நீதிமன்றத்தின் முன் ஆஜராகத்தான் வேண்டும்.

தொடர்ந்தும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினர்.

இதேவேளையில் தாம் மீண்டும் ஒரு தடவை பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்க்கப் போவதாகவும் மாஜிஸ்திரேட் திரு. நாணயக்கார, நீதிமன்றத்தில் கூறினர்.
(எ—105)

# நான் ஹீரோக்களைப் பற்றி கவலைப்பட மாட்டேன்

## சரிதா கூறுகிறார்

"என்ன உங்கள் தங்கை விஜயாவை நடிக்க வைப்பது பற்றி முடிவு எடுத்து விட்டீர்களா?".

அண்மையில் நடிகை சரிதாவை பேட்டி கண்ட நிருபர் ஒருவர் இவ்வாறு கேட்டார்.

"வேண்டாம், நான் ஒருத்தி படவுலகில் இப்படி வேடம் போடுவது போதாதா? அவள் வீட்டில் எனக்கு உதவியாக இருந்து வருகிறாள். எந்தப்பட அதிபரும் சீரியசாக அவளை நடிக்க கூப்பிடவில்லை. இப்போதைக்கு விஜயா படங்களில் நடிக்க வரமாட்டாள்" என்று பதில் கூறிய சரிதா,

"எதற்கும் வீட்டிற்கு வந்து அவளிடமே அதைப் பற்றி கேட்டுக் கொள்ளுங்கள் என்றார்".

"இப்போது தியாகராஜனுடன் தான் நிறையப் படங்களில் நடிக்கிறீர்கள் போலிருக்கிறதே?" என்று மேலும் கேட்க,


சரிதா

ஆமாம், மலையூர் மம்பட்டியானுக்கு பிறகு கொம்பேறிமூக்கன், எரிமலை என்று வரிசையாக சில படங்களில் அவருடன் நடிக்க வைக்கிறார்கள். ராஜேந்தர், ராஜேஷ், சிவாஜி ஆகியோருடனும் நடிக்கிறேன் என்றார் சரிதா.

"ஒரு நடிகை தன்னுடைய யார் நடிக்கிறார்கள் என்பதை பார்ப்பதைவிட தன் நடிப்புக்கு படத்தில் "ஸ்கோப்" இருக்கிறதா என்று பார்த்து கிடைத்த வேடத்தில் "ஸ்கோர்" பண்ணுவதே சிறந்தது என்பது எனது இலட்சியம். நான் ஹீரோக்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன். என் வேடத்தை மட்டுமே பார்ப்பேன்" என்று தன்னம்பிக்கையுடன் சரிதா கூறினார். (ல—10)

## இரட்டை வேடத்தில் ஊர்வசி

ஊர்வசி இரட்டை வேடத்தில் நடிக்கும் படம், சன்ஷைன் கிரியேசன்ஸ் "அனுக்கிரகம்".

விஜயபாரதி கதாநாயகனாக நடிப்பதுடன் டைரக்ட்டும் செய்கிறார்.


ஊர்வசி

ஜெய்சங்கர் முக்கிய வேடத்தில் நடிக்க, இந்தப் படம் வளர்ந்து வருகிறது. ஒளிப்பதிவு: ரகு. (ஜ—10)

## கொட்டும் மழையில் இளம் ஜோடி காதல்!

"பக்கத்தில் வந்தால் என்ன தீர்த்தனா வெட்கத்தில் போவதென்ன தீர்த்தனா..." என்ற பாடல் கேட்டு கற்பகம் படப்பிடிப்பு நிலையம் நோக்கி பறந்தார், நமது நிருபர்.

அங்கே வண்ண வண்ண உடைகள் அணிந்து பட்டு வண்ணச் சிட்டுகள் போல ஒரு டஜன் இளம் பெண்கள் "பக்கத்தில் வந்தால் என்ன தீர்த்தனா..." என்ற பாட்டுக்கு ஏற்ப ஆடினார்கள்.

அப்போது செயற்கை மழை கொட்டியது. இளம் காதல் ஜோடி (ஜெயந்த் – ஜீவிதா) ஆடல் அழகிகள் இடையே புகுந்து கட்டி அணைத்தபடி கொட்டும் மழையில் காதல் ஆட்டம் போட்டனர்.

இது 2 லட்சம் ரூபாய் செலவில் குளுகுளு வசதி செய்யப்பட்ட படப்பிடிப்பு அரங்கில் ஏ. ரத்தினத்தின் சோபனாஸ் வழங்கும் "உறவைக் காத்த கிளி" என்ற படத்துக்காக படம் ஆக்கப்பட்டது.

"உறவைக்காத்த கிளி" படத்தில் முக்கிய வேடத்தில் நடிப்பதுடன் கதை, திரைக்கதை வசனம், பாடல், இசை, ஒளிப்பதிவு பொறுப்பேற்று டைரக்ட் செய்கிறார், டி. ராஜேந்தர்.

இந்தப் படத்தின் வெளிப்புறக்காட்சிகள் கொடைக்கானலில் படம் ஆக்கப்படுகின்றன. (ஜ—10)

தினபதி சினிமா



பாண்டியன்
விழி காதல்

## கிராமோதய சபைகளின் நோக்கம்

பேசாலை, ஜூன் 28

இன்றைய அரசு கிராமங்களின் பிரச்சினைகளை புதிய நோக்கில் அணுகி வருகிறது. கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திலேயே நாடு முழுவதிலும் கிராமோதய சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

எருக்கலம்பிட்டி கிராமோதய சபையின் முதலாவது கூட்டத்தில் உரையாற்றிய கிராமோதய சபை தலைவரும், மன்னார் பிரதேச சபை தலைவருமான ஜனாப் எம். எம். இப்ராகீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஒரு நாட்டின் துரித வளர்ச்சிக்கு கிராம அபிவிருத்தி அவசியம்.

ஆதலால்; கிராமோதய சபைகளுக்கு அரசு வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு கிராம அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கூறினார். (ல—251)

## மனைவி ஏசியதால் கணவர் மரணம்

கிளிநொச்சி, ஜூன் 28

மரணச் சடங்கொன்றில் கலந்து விட்டு மதுபோதையில் வீடு திரும்பிய வயோதிபர் ஒருவரை மனைவி ஏசினார். இதனால் மனமுடைந்த அவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். (எ—244)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கூனி இறால் வளர்ப்புக்கு உலக வங்கி உதவி

## பிரதேச அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு

வவுணதீவு, ஜூன் 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் உலக வங்கியின் உதவியுடன் பாரிய கூனி இறால் வளர்ப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை, பிரதேச அபிவிருத்தி அமைச்சு தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கிராமங்களிலுள்ள பல குளங்களில் இறால் வளர்ப்பதற்கு உலக வங்கியின் அனுசரணையுடன் உள்ளூர் வங்கிகள் கடனுதவிகளை வழங்கும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் இறால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இதனால் பலருக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கும்.

இது தொடர்பாக அமைச்சர் திரு. செ. இராசதுரை உலக வங்கியின் விவசாய கைத்தொழில் தெற்காசிய கடனுதவி திட்ட பிரதிநிதி திரு. எஸ். சன்னுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார். இதனை அடுத்து உலக வங்கி அதிகாரிகள் திரு. சன்னுடன் மாவட்டத்தின் பல இடங்களையும் சென்று பார்வையிட்டார்கள்.

இதே வேளையில், கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவுடனும், அமைச்சர் இராசதுரை இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். இதனையடுத்து நிலைமையை நேரில் ஆராயும் பொருட்டு கடற்றொழில் அமைச்சு அதிகாரிகள் ஜூலை மாத நடுப்பகுதியில் மட்டக்களப்புக்கு வருகை தருகிறார்கள். (ல—318)

## சட்ட திருத்தங்களை வாபஸ் பெற வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 29

பத்திரிகைச் சட்டத்துக்கான உத்தேச திருத்தங்களை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்வாறு அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

உத்தேச திருத்தங்கள் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பெரிதும் பாதிக்கும், என்று சங்கம் தெரிவித்திருக்கிறது. (எ—8)

## பேத்தாழை: கல் நடும் வைபவம்

வாழைச்சேனை, ஜூன் 28

வாழைச்சேனை, பேத்தாழை வீரையடிப் பிள்ளையார் ஆலயத்தின் புதிய கட்டடத்திற்கான கல் நடும் வைபவம் இன்று 29 ஆம் திகதி இரவு நடைபெறும்.

இதனையொட்டி இன்று ஆலயத்தில் விசேட பூசைகளும், செங்கல் விற்பனவும் நடைபெறும். இத்தகவலை ஆலயப் பரிபாலனத் தலைவர் திரு. ந. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ல—319)

# முஸ்லிம்களுக்கு ஸக்காத் ஏழை வரி

## பைத்துல்மால் நிதியம் வழங்கும்

கொழும்பு, ஜூன் 29

இலங்கை பைத்துல்மால் நிதியம் ரமழானை முன்னிட்டு 1,500 முஸ்லிம்களுக்கு ஸக்காத் ஏழை வரியை வழங்கும்.

தமது பெயரை வெளியிட விரும்பாத ஒரு முஸ்லிம் பெரியார், ஏழைகளுக்கு ஸக்காத் வழங்குவதற்கென 66,500 ரூபாவை, பைத்துல்மால் நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார்.

ஸக்காத் பெறத் தகுதியுடையவர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ள ஆறு கூட்டத்தவர்களுக்கு இந்த ஸக்காத் உதவி வழங்கப்படும்.

இவ்வாறு பைத்துல்மால் நிதியத்தின் செயலாளர் ஜனாப் எஸ். எஸ். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

கொழும்பிலேயே ஸக்காத் பணம் கூடுதலாகச் சேகரிக்கப்படுகிறது. கொழும்பில் உள்ள ஏழைகளே இந்த உதவியைக் கூடுதலாகப் பெறுகின்றனர்.

வெளி இடங்களைச் சேர்ந்தவர்களுக்கும் உதவிகள் வழங்கப்படும் என்றும் ஜனாப் இஸ்ஸதீன் மேலும் தெரிவித்தார். (ண—7)

பாண்டியனின்

## விஜி காதல்

பாண்டியனும், விஜியும் கரும்புத் தோட்டத்தில் ரகசிமாக சந்தித்தார்கள்.

"கொய்யா கொய்யா கொத்தவரங்கா... குளிக்க வந்த தட்டவரங்கா..." என்று இருவரும் ஆடிப்பாடினார்கள்.

இப்படி ஒரு காட்சி, நாகேஸ்வரி கம்பைன்ஸ் தயாரிக்கும் "சுக்ரதிசை" படத்திற்காக செங்கல்பட்டு அருகே படமாக்கப்பட்டது. விஜய் .ஒளிப்பதிவில் டி. கே. மோகன் டைரக்ட் செய்தார். (ல—10)

## விஜிக்குப் பதில் ஊர்வசி நடிப்பு

கீதாஞ்சலி மூவிசார் தயாரிக்கும் படத்தில் மோகனுடன் முதலில் விஜி நடிப்பதாக இருந்தது. இப்போது விஜிக்கு பதில் ஊர்வசி நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளார்.

ராம். நாராயணன் திரைக்கதை வசனம் எழுதி இயக்கும் இந்தப் படத்தில் வனிதா, ஒய். ஜி. மகேந்திரன், செந்தாமரை, ராதாரவி, எஸ்.எஸ். சந்திரன், லூஸ் மோகன், காந்திமதி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

என். கே. விசுவநாதன் ஒளிப்பதிவு செய்ய, சங்கர் – கணேஷ் இசை அமைக்கிறார்கள். (ம-10)



தன் அன்புக்குரியவர் வந்து விட்டார் என்ற மகிழ்ச்சியோடு கூடவே நாணமும் வந்து விட்டதோ சசிகலாவுக்கு? படம்:கொலுசு. (ஜ—10)

கடன் வழங்கு சபையில்

# குறுகிய காலத்தில் அதிக உறுப்பினர்கள் பயன்

## கல்முனை கல்வி அதிகாரி பெருமிதம்

நிந்தவூர், ஜூன் 28

"கல்முனை கல்வி மாவட்டக் கடன் வழங்கு சபை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே புதிதாக நிருவாகத்தைப் பொறுப்பேற்றது. இருப்பினும் இக்குறுகிய காலத்தில் அதன் அரைவாசி உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகளை வழங்கி பயனடையச் செய்திருக்கிறது.

கல்முனை கல்வி மாவட்டப் பிரதம கல்வி அதிகாரியும், கடன் வழங்கு சபையின் [illegible] ஷெரீப் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சபையின் முகாமைக் குழுக் கூட்டம் அண்மையில் கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமையுரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாப் ஷெரீப் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"இந்த கடன் வழங்கு சபையின் சேவைக் காலத்தினுள் எந்தவொரு உறுப்பினரும் [illegible] விக்கவில்லை. இது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும்" என்றார்.

கடன் வழங்கு சபைச் செயலாளரும், நிந்தவூர் "தினபதி" வாசகர் சங்கச் செயலாளருமான ஜனாப் ஏ. எல். எம். அமீன் அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றுகையில்:—

முகாமைக்குழு உறுப்பினர்கள் எமது திட்டங்களுக்கு அளித்து வரும் ஆதரவால் பலரும் பாராட்டத்தக்கவாறு நாம் கருமங்களை ஆற்றுகின்றோம்.

கடந்த இரண்டரை ஆண்டு காலத்திற்குள் 850 உறுப்பினர்கள் கடன் வசதிகளைப் பெற்று உள்ளனர். 21 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இவர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது" என்றார்.

முகாமைக்குழு உறுப்பினர்களான திரு. என். மனோகரன், திரு. கே. சதானந்தன், ஜனாப் ஏ. எல். கலந்தர்லெவ்வை ஆகியோரும் உரையாற்றினார்கள். (ல—217)


# தரமான பொருள்களைத் தருவித்துக் கொடுக்க நாம் என்றும் தயங்கியதில்லை!

தருவிக்கப் பட்டுள்ளன

MF மஸி பேர்குஸன்

உழவு இயந்திர உதிரிப் பாகங்கள்

POWERPART

உங்கள மஸி பேர்குஸன் உழவு இயந்திரம அறபுதமாகச செயறபட அசல மஸி பேர்குஸன் உதிரிப் பாகங்கள எங்களிடம கையிருப்பில் உள்ளன.

குறிப்பிட்ட தொகையே கையிருப்பில் உள்ளதால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள் !

தொடர்பு கொள்ளுங்கள் :

விற்பனை முகாமையாளர் (உதிரிப்பாகப் பிரிவு)

இலங்கை அரச வர்த்தக (உழவு இயந்திர) கூட்டுத்தாபனம்

343. ஒல்கொட மாவத்தை, கொழும்பு 11.

தொலைபேசி 549952 - 3, 25960, 21347, 94210




Splads STT/84/103

# தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

— 1984 ஜூன் 29 —
சுடர் 17 கதிர் 2714


## விஞ்ஞான ஆசிரியர்கள்

வேலை உண்டு ஆனால் செய்ய ஆளில்லை.

உத்தியோகம் இருக்கிறது. ஏற்பதற்குப் பொருத்த மாணவர்கள் இல்லை.

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் விஷயத்தையே இங்கு குறிப்பிடுகிறோம்.

18 முதல் 28 வயது வரை உள்ளவர்களிடமிருந்து விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரியது கல்வித் திணைக்களம்.

அது படு ஏமாற்றமாகி விட்டது. எதிர்பார்த்த படி விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை.

வயதெல்லையை உயர்த்தி 40 வயது வரையுள்ளவர்களையும் விண்ணப்பிக்க அனுமதிப்பது என்று கல்விச் சேவைகள் ஆணைக் குழு இப்போது முடிவு செய்திருக்கிறது.

இவர்கள் விண்ணப்பிப்பதற்கு வசதியாக விண்ணப்ப முடிவு திகதியையும் பின் போடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

எப்படியாவது பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து விட வேண்டும் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழு முயற்சி செய்து வருவது பாராட்டத்தக்கது.

ஆனால் முயற்சி பலனளிக்குமா என்ற சந்தேகம் எழுகிறது.

நாற்பது வயதுக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கக் கூடும்.

அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரிகள் என்ற ஒரே காரணத்தால் அவர்களை ஆசிரியர்களாக [illegible] நியமிக்கலாமா என்ற கேள்வி எழுகிறது.

விஞ்ஞானக் கோட்பாடு [illegible]

# நல்லன தந்திடுவாள்
# நயினை ஸ்ரீ நாகபூஷணி

## அம்பாள் ஆலயத்தில் வருடாந்த உற்சவம்

நயினாதிவு ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றைய தினம் (28-6-1984) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படும் இலங்கையின் தலையென்று போற்றப்படுவது யாழ். குடா நாடு, இந்த குடா நாட்டில் அலையெறியும் சமுத்திரத்தின் மத்தியில் திகழ்வன சப்த தீவுகள்.

இத்தீவுக் கூட்டங்களில் அளவில் சிறியதும், புகழில் பெரியதுமாகி மிளிர்வது நயினை தீவு. சரித்திர இதிகாச, காப்பிய வரலாறுகளில், இடம்பெறும் மணிபல்லவம் இதுவே. நாவல் ஆசிரியர்களும் ஏனையோரும் மணிபல்லவத்தைத் தமது கதைகளில் தொட்டுக் கூறும்போது பரம திருப்தியடைகின்றார்கள்.

இத்தனை சிறப்புமிக்க இத்தீவின் தொன்மைக்கு காரணம், ஆதியில் உலகளாவிய முறையில் இருந்த நாக வழிபாட்டின் தனிப் பெரும் சின்னமாக இன்று வரையும், மாறுபாடின்றி இத்தீவில் எழுந்தருளி இருக்கும் குண்டலினி சக்தியின் அமைப்பே.

அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய ஸ்ரீ புவனேஸ்வரி பீடமாகி இச்சக்தி பீடம் திகழ்வதாக தேவி பாகவதம் கூறுகின்றது.

வானுயர்ந்த கோபுரங்களுடன், விமானங்களையும் தாங்கி நான்கு வீதியும் வேப்ப மரச் சோலையும் சூழ, அழகொடு அருளையும் வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டு திகழ்கிறது அவ்வன்னையின் ஆலயம்.

சென்ற 28–8–83 அன்று இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று குடமுழுக்காட்டப் பெற்று கவின் பெறு காட்சியுடன் திகழ்கின்றது. இவ்வாலயத்தின் தென்வாசல் இராச கோபுர கும்பாபிஷேகம் 18–6–84 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இவ்வருள்மல்கும் ஆலயத்தை காலத்திற்குக் காலம் பல ஞானியரும் யோகியரும் தரிசித்து, அன்னையின் அருளில் மாந்தி திளைத்துள்ளார்கள்.

இந்த வகையில் அன்னையைத் தரிசித்த சிலர் தம் உள்ள உணர்வில் தோன்றியவற்றை எழுத்தோவியமாகவும் தந்துள்ளார்கள். அத்தகைய பக்தி உணர்வை அன்னையின் அடியார்கள் அறிந்து கொள்ளலாம்.

அன்னையின் தரிசனத்தை இதுகால வரையும் பெறாதவர்கள் தற்போது அங்கு நடைபெறும் உற்சவத்தின் போது அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

மணிமேகலை தந்த அமுத சுரபி அமுதம் அருள, அன்னையின் அருளைப் பொழிய, கூடுகின்ற அடியார் விழி நீர் பொழிய இக்காட்சிகளைக் காண ஆயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே என்று தான் எண்ணத் தோன்றும்.

தாயின் அருள் பெற்றவர்கள் கூறிய சில கருத்துகளை இங்கு படிக்கலாம்.

★ நூறு ஆண்டுகளுக்கு முன்பாக அன்னையைக் கண்டு ஆனந்தம் பெற்றவர் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார். அவர் கூறுகிறார்: "இந்த பரந்த உலகத்தைப் படைத்து புகழ்பெற்ற பிரமனும், இதைக் காத்து அருள்கின்ற திருமாலும் காலத்துக்கு காலம் சங்காரம் செய்கின்ற உருத்திரனும், அட்ட திக்களில் உள்ள யானைகளும், தத்தம் தொழிற்பாட்டில் தவறாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்று பார்த்தால் அகில லோக ஜெனனியாகிய அன்னை ஸ்ரீ மாதாவின் அருளே என்று அறிந்தேன். இந்த பராசக்தி வேறு எங்கும் இல்லை. தொண்டர்கள் நாளும் துதி செய்யும் இலங்கை நயினை தீவில் எழுந்தருளி இருக்கும் நாகயீஸ்வரி தான் அவள் என்றும் தெரிந்தேன்"

★ புராண வித்தகர் நயினை வரகவி தியாகர் இராமச் சந்திரர் கூறுகின்றார்: அலையெறியும் சமுத்திரத்தின் நடுவே பாம்பன் கடலில் இருக்கும் பாம்பு சுற்றிய கல்லும், கருடன் கல்லும், என்ன பாஷை இது என்று அறிய முடியாமல் எழுதப்பட்ட கல்சாசனம், ஒப்பு உவமை இல்லாத நின் தோற்றம். இவற்றிற்கு எல்லாம் சிகரம் வைத்தாற் போல் நீ அமர்ந்திருக்கும் பீடம். பீடத்தின் பின் புறத்தே தோன்றும் ஐந்து தலை நாகம், இதில் எது உன் அருளுக்கும் புகழுக்கும் சான்று தாயே!

★ நயினை நாகமணிப் புலவர்: நீங்கள் ஒரு முறை நயினாதீவுக்கு வந்து அங்கே பக்தர்கள் கொண்டு வந்து குவிக்கும் காணிக்கைகளைக் கவனியுங்கள். செய்யப்படும் நேர்த்திக் கடன்களைக் கவனியுங்கள். இவற்றால் ஓரளவு அன்னையின் அருளை நீங்கள் அறிய முடியும்.

★ திருகுல சபாநாதன்: திருமணம் செய்தும் பல ஆண்டுகள் மகப்பேறு இல்லாத தம்பதிகள் அம்பாளிடம் வந்து வேண்டிக் கொண்டபின் பிள்ளைப்பேறு கிடைப்பதாகக் கூறக் கேட்டுள்ளேன். இது உண்மைதானா என்று ஆராய்ந்த போது அவ்விதம் அருள்பெற்ற தம்பதிகளையே நேரில் காணும் வாய்ப்புக் கிட்டியது.

★ அமரர் திரு. க. இராமச் சந்திரன்: மிகுந்த அழகும் சாந்நித்தியமும் பொருந்திய இவ்வன்னையின் பூரண தேஜோமய சோபையைக் கண்டின்புற விரும்புவோர் நயினாதீவிற்கு ஆனி மாதத்தில் நடைபெறும் திருவிழாவில் இறுதிநாள் அன்று அம்பாள் தேரில் எழுந்தருளும் காட்சியைப் பெற வேண்டும்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் ஒருமுறை இலங்கைக்கு வருகை தந்த போது இவ்வன்னையைத் தரிசனம் செய்ய வந்தார். இவர் வரும் போது காலை நேரம், பூசை முடிந்து; கிழக்கே சூரிய இளங்கதிர் ஒளி மூலஸ்தானத்தில் விழுந்து கொண்டிருந்தது.

மூல விக்கிரகத்தை அப்பொழுது வெள்ளிக் கவசம் ஒன்றால் மூடி வைத்திருப்பது வழக்கம். யோகியார் வந்த பொழுதும் இவ்வாறே இருந்தது.

யோகியாரின் தரிசனத்திற்காக வெள்ளிக் கவசத்தை குருக்கள் எடுத்த போது, யோகியார் மிகவும் பரவசநிலை கொண்டார்.

அங்கு நின்ற அறங்காவலர்களைப் பார்த்து இன்று முதல் இந்த கவசத்தை அன்னைக்கு சாத்த வேண்டாம். இவளின் அருள் ஒளிக்கதிர்களை வெள்ளிக் கவசத்தால் மூடி, அவளின் தெய்வீக ஒளியை தடை செய்யாதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்.

அன்று முதல் இந்த வெள்ளிக் கவசம் (அங்கி) நீக்கப்பட்டு, இன்றுவரையும் அன்னையின் உருவமே தரிசிக்கப்படுகின்றது.

தமிழக அறிஞர் கி. வா. ஜெகந்நாதன், பக்திப் பாடகர் பித்துக்குளி முருகதாஸ் ஆகியோரும் நயினை அன்னையை நேரில் தொழுது அருள் பெற்றிருக்கிறார்கள் (ம)

**— ஆ. தியாகராசா —**

## செய்தித் திரட்டு

### விலை உயர்வு

சீனக்குடா, ஜூன் 28

வடபகுதியிலிருந்து வரும் வாழைப் பழங்களின் விலை என்றுமிலாதவாறு மிகவும் உயர்ந்துள்ளது.

திருகோணமலைப் பகுதிக்கு வட பகுதிகளிலிருந்தே அதிகமாக வாழைப்பழங்கள் வருவது வழக்கம். ஆனால் கடந்த சில வாரங்களாக வட பகுதி வாழைப்பழங்கள் வருவது குறைந்திருப்பதுடன் விலையும் மிக உயர்ந்து விட்டது. (ஜ-54)

### ஓய்வு பெற்றார்

புங்குடுதிவு, ஜூன் 29

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய. மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றிய திருமதி தருமலட்சுமி சதாசிவம் அண்மையில் சேவையினின்றும் ஓய்வு பெற்றார்.

அன்னாருக்குப் பிரஸ்தாப வித்தியாலயத்தில் அண்மையில் சேவை நலம் பாராட்டுபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது. (ல-240)

### உத்தரவு

சீனக்குடா, ஜூன் 28

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் 10 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் ஒவ்வொரு குடும்பத்தினரும் தலா ஐந்து மரங்களையாவது நடவேண்டும்.

இவ்வாறு தேசிய வீடமைப்பு அதிகார சபை உத்தரவிட்டிருக்கிறது. (ல-54)

### நீதிமன்றம்

அக்மீமன, ஜூன் 28

காலி மாவட்டத்தைச் சேர்ந்த ஹபராதுவைத் தொகுதியில் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்று விரைவில் நிறுவப்படும்.

ஹபராதுவ எம்.பி. திரு. ஜி. வி. எஸ். த சில்வா இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறார். "கொக்கலை" என்ற கிராமத்தில் இந்த நீதிமன்றம் அமைக்கப்படும்.

இப்பகுதியில் "கிராமோதய நீதிமன்றம்" ஒன்று முன்பு இய[illegible]

## புதிய கல்வித் திட்டத்தில்
# தொழில் நுட்பத்துக்கே

## திருமலை ரோட்டரிக் கழகம்
# பாகுபாடுகளின்றி

களை ... நியமிக்கலாமா என்று கேள்வி எழுகிறது.

விஞ்ஞானக் கோட்பாடுகள் சதா மாற்றமடைந்து வருகின்றன. புதுப் புதுக் கண்டுபிடிப்புகள் வந்து கொண்டு இருக்கின்றன.

ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு அமெரிக்காவிலே வெள்ளை மாளிகையில் ஜனதிபதி றேகன் வரவேற்பு அளித்த போது ஜனதிபதி ஜெயவர்த்தன பேசிக்கொண்டிருந்ததை உடனுக்குடன் நாம் ஒவ்வொருவரும் வீட்டில் இருந்தவாறே டெலிவிஷனில் பார்த்தோம்; கேட்டோம்.

அந்த அளவுக்கு இன்று விஞ்ஞானம் வளர்ந்து விட்டது.

40 வயதுக்காரர்கள் படித்த விஞ்ஞானம் இன்று காலம் கடந்த விஞ்ஞானம்.

இன்றைய மாணவர்களுக்கு அதைப் போதித்து என்ன பயன்?

கம்பியூட்டர், சட்டிலைட் போன்ற நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் பற்றி 40 வயதுக்காரர்களில் எத்தனை பேரால் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும்?

புதிதாக விஞ்ஞானக் கல்வி அறிவு பெற்ற இளம் வயதுப் பட்டதாரிகள் தான் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்குப் பொருத்தமானவர்கள்.

அவர்கள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுப் பறந்து விடுகிறார்கள்.

இங்கே கிடைப்பதை விட எத்தனையோ மடங்கு கூடுதலான சம்பளம் வெளிநாடுகளில் அவர்களுக்குக் கிடைக்கிறது. ஆயின் அவர்கள் ஏன் இங்கே இருக்கப் போகிறார்கள்?

வெளிநாடுகளில் கொடுக்கப்படும் உயர்ந்த சம்பளத்தை இங்கே கொடுப்பது சாத்தியமில்லை என்பது உண்மைதான். என்றாலும் ஓரளவிலாவது இங்கே சம்பளத்தை உயர்த்தாவிட்டால் பொருத்தமான விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களைப் பிடித்து சேவைக்கு அமர்த்த முடியாது.

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி டாக்டர்கள், பொறியியலாளர்கள் போன்றவர்களுக்கும் சம்பளத் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

அப்போதுதான் தகுதியானவர்கள் இங்கே சேவைக்குக் கிடைப்பார்கள்.

அரசாங்கம் உடனடியாகக் கவனிக்க வேண்டிய விஷயம் இது.

# தொழில் நுட்பத்துக்கே முக்கியத்துவம்

## மாத்தறை எம். பி. உரை

மாத்தறை, ஜூன் 28

நவீன காலத் தேவைக்கேற்ப நாட்டின் கல்வித் திட்டத்தை அரசாங்கம் மாற்றி அமைத்திருக்கிறது. புதிய கல்வித் திட்டத்தில் தொழில் நுட்பத்துக்கே முக்கியத்துவம் வழங்கப் பட்டிருக்கின்றது.

இவ்வாறு மாத்தறை எம்.பி.யும், கிராம கைத்தொழில் அபிவிருத்தி பிரதி அமைச்சருமான திரு. எஸ். கே. பியதாஸ கூறினர்.

மாத்தறை ஒல்கொட் கனிஷ்ட வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. ஹமில்டன் ஜயசிங்கவை கௌரவிக்குமுகமாகவும், 5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசு வழங்குமுகமாகவும் பெற்றோர் ஆசிரியர்களால் இந்த வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பிரதி அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

உலகம் தொழில்நுட்பத் துறையில் முன்னேறி வரும் இவ்வேளையில் நாமும் அதற்கேற்றவாறு எமது நாட்டில் அதனை விருத்தி செய்ய வேண்டும்.

இன்று பாடசாலை மாணவர் மத்தியில் ஒழுக்கம், நற்பண்புகள் என்பன குறைந்து வருகின்றன. ஆசிரியர்களை, பெற்றோரை, பெரியோரை கௌரவிக்கும் பண்பு அவர்களிடம் மிக அரிதாகவே காணப்படுகின்றது.

இதனால் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது.

கல்வியைவிட மாணவர்களுக்கு நற்குண நற்பண்பாடுகளை கற்றுக் கொடுப்பதே முக்கியமானதாக இருக்கிறது.

எவ்வளவு படித்துப் பட்டம் பெற்றாலும் நல் ஒழுக்கமும் நற்பண்புகளும் இல்லவிட்டால் பயனில்லை.

எதிர்கால சந்ததியை நற்பிரஜைகளாக உருவாக்கினல் நாட்டில் குற்றச் செயல்கள் நடப்பதைத் தவிர்க்க முடியும்.

நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் நற்சேவை புரியும் ஆசிரியர்களை கௌரவித்து அதனை சமுதாயத்துக்கு உணர்த்த வேண்டும். அதன் மூலம் ஏனைய ஆசிரியர்களிடத்திலும் கடமையுணர்ச்சியை ஏற்படுத்தலாம்.

இவ்வாறு அவர் கூறினர்.

வட்டார கல்வி அதிகாரி திரு. என். டபிள்யூ. எஸ். பெரேரா பிரதம கல்வி அதிகாரி திரு-கே. குமாரசிங்க, வித்தியாலய அதிபர் எஸ். அபேவிக்கிரம உட்பட பலர் அங்கு உரையாற்றினர்கள்.

(ல—25)

## பாலைநகர் மாரியம்மன் அடிக்கல் நடும் வைபவம்

மூதூர், ஜூன் 28

நகர சுத்தித் தொழிலாளர்களுக்கான மாரியம்மன் ஆலய அடிக்கல் நடும் வைபவம் நாளை 30ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

இவர்களுக்கான வழிபாட்டு ஸ்தலம் ஒன்றில்லாததால் திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் மேற்படி ஆலயத்தை அமைத்துக்கொடுக்க முன்வந்திருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினருடன் மூதூர் தொகுதியில் உள்ள அனைத்து இந்து இளைஞர் மன்றங்களும் இணைந்து இவ்வாலய நிர்மாண வேலைகளில் செயல்பட முன் வந்திருக்கின்றன. (ல–186)

# புனித ரமழான் சிந்தனைகள்

நல் அமல் புரிவதை விடச் சிறந்தது ஒரு முஃமீனின் (விசுவாசியின்) பரிசுத்த எண்ணமாகும்.

நபிமணி (ஸல்) அவர்கள் இவ்வாறு திருவாய் மலர்ந்தருளினர்கள்.

எண்ணங்கள் ஏற்றம் மிக்கவைகளாக அமைய வேண்டும். புனித ரமழானின் அந்திம காலங்களில் இந்த விடயத்தில் நாம் சிந்திப்போம்.

சிறந்த எண்ணங்களும், சீரிய நற்குண நல்லொழுக்கங்களும் முஸ்லிம்களின் அணிகலன்களாகும். (நாம் நற்குலசீலர்களாக மாற புனித ரமழான் அரும் பயிற்சிகளை அள்ளித்தந்தது. துர்க்குணங்களை நாம் ரமழானில் குழிதோண்டிப் புதைத்தோம், தூயவர்களாகி மாறி விட்டோம்.

நான்கு அருங்குணங்கள் அமையப் பெற்றவரின் பாவங்களை இறைவன் நன்மைகளாக மாற்றி அமைக்கிறன். அவையாவன:— உண்மை, வெட்கம், நன்றியறிதல், நற்குணம் ஆகும்.

இவ்வாறு ஹஸரத் அலி (ரலி) அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

நற்குணத்துக்கு விளக்கம் அளித்த மெஞ்ஞானி அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவித்தார்கள்.

நற்குணம் என்றால் என்ன?, "ஹக்" என்னும் தெய்வ சத்தியங்களை ஆய்ந்த பிறகு "கல்கு" என்னும் படைப்புக்களின் கொடுமை உன்னை நிலைகுலையச் செய்யாதிருத்தலும், தன்னையும்; தன்னில் அமைந்திருக்கும் குறைபாடுகளையும் உணர்ந்து உன்னை நீ கிழாகக் கருதுவதும் பிறரிடம் அமைந்திருக்கும் ஈமான் ஞானம் இவைகளைச் சிந்தித்து; அவர்களை நீ கண்ணியப் படுத்துவதும் ஆகும்.

நான் நற்குணங்களைச் சம்பூரணப் படுத்துவதற்கே (தூதராக) அனுப்பப்பட்டு இருக்கிறேன் – என திருநபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்.

ஆகவே -

நற்குணம் மிக்கவர்களாக எக்காலமும் வாழ நாம் முனைவோம். ரமழான் எமக்கு தந்த நல்லொரு படிப்பினையையும் எமது வாழ்வின் முன்னேற்றத்துக்கும் ஆன்மிக ஈடேற்றத்துக்குமான ஒவ்வொரு படிகளாகக் கொள்வோம். அல்ஹம்துலில்லாஹ்!

— எப். எம். லைருஸ்

# பாகுபாடுகளின்றி சமூக சேவையாற்றுகிறது

## அன்பளிப்பு வைபவத்தில் பாராட்டு

சீனக்குடா, ஜூன் 28

திருகோணமலை ரோட்டரிக் கழகம் எவ்வித வேறுபாடுகளுமின்றி சமூகத்துக்குச் சேவையாற்றுகிறது. இதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இந்த உண்மையை இன்று நாம் நேரிலேயே காண்கிறோம்.

திருகோணமலை மதரஸதுல் ஹிதாயா அரபு மத்ரஸா மாணவர்கள் 60 பேருக்கு திருகோணமலை ரோட்டரிக் கழகம் அண்மையில் கல்வி உப கரணங்களை அன்பளிப்பாக வழங்கியது. இவ் அன்பளிப்பு வைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் மூதூர் முன்னள் முதல் வரும் ரோட்டரிக் கழக உறுப்பினருமான அல்ஹாஜ் எம். ஈ. எச். முகம்மதலி கூறினர்.

மத்ரஸா அதிபர் மௌலவி வி. எம். தமீமின் கிராஅத்துடன் இவ் வைபவம் ஆரம்பமாகியது- கழக உறுப்பினர்களான திரு- பி- திருமுகம், திரு- பீ- ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்கினர்கள்.

ஜனப் முகம்மதலி அங்கு தொடர்ந்து பேசுகையில்:—

கழகங்கள், இயக்கங்கள் என்பன சமூக நலனுக்காக உழைக்க வேண்டும். அதேவேளை அவை எவ்வித இன மத மொழி, வேறுபாடுகளைக் காட்டக் கூடாது.

இந்த வகையில் திருகோணமலை ரோட்டரிக் கழகம் சிறப்பாக செயலாற்றி மக்களின் ஆதரவைப் பெற்று வருகிறது. இது பாராட்டத் தக்கது.

இவ்வாறு அவர் கூறினர்.

இவ் வைபவத்தில் மத்ரஸா ஆசிரியர்களான ஜனப்கள் ஏ. ஆர். எம். ஹக்கீம் லெவ்வை, எம். அம்ஜாட் அலி, ஏ. அனஸ், திருவாளர்கள்:— கனகசபாபதி, எஸ். சிவஞான சுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்கள். (ல–54)

# கிளிநொச்சி ரயில் நிலையத்தின் அவலம்

கிளிநொச்சி, ஜூன் 28

கிளிநொச்சி ரயில் நிலையத்திற்கு பாதுகாப்பு வேலி இல்லாததால் இந்நிலையம் பொதுமக்களின் போக்குவரத்துப் பாதையாக மாறி வருகின்றது.

கால்நடைகள் ரயில் நிலைய மேடையில் படுத்துறங்குகின்றன. ரயில்களில் வரும் பிரயாணிகள் இறங்கியதும் தாம் நினைத்தபடி இறங்கிய இடத்திலிருந்து வெளியேறி விடுகின்றனர்.

இதனல் இங்கு பணிபுரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் பிரயாணிகளுக்கும் இடையில் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை ரயில் நிலையத்திற்குள்ளாக பொது மக்கள் போக்குவரத்துச் செய்வதை தடை செய்ய முடியாமல் உத்தியோகத்தர்கள் தடுமாறுகின்றனர்.

இதுவே கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான ரயில் நிலையமாகும்.

வட பகுதியில் பிரபல்யமான கிளிநொச்சி சந்தைக்கு பல்வேறு தூர இடங்களிலிருந்தும் வியாபாரிகள் ரயில் மூலமாக வந்து பொருட்களை கொள்வனவு செய்கின்றனர்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கிளிநொச்சி ரயில் நிலையம் சீர்கேடடைந்து வருவது வருந்தத் தக்கதாகும். இந்நிலையத்தின் கட்டடச் சுவர்கள் அழுக்கடைந்த நிலையில் காணப்படுகின்றன. வர்ணம் பூசப்பட்டு சுமார் பத்து வருடங்களுக்கு மேல் இருக்கும். நிலையத்தின் இரு மருங்கிலும் நாட்டப்பட்டிருக்கும் பெயர்ப் பலகைகளில் எழுத்துக்கள் அழிந்த நிலையில் காணப்படுகின்றன.

இந் நிலையத்தில் நிலவும் பல்வேறு குறைபாடுகளையும் நீக்கி பிரயாணிகளின் கஷ்டங்களைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ல–244)

மக்கள்
பிரச்சினையில்
தினபதி

இப்பகுதியில் "கிராமோதய நீதிமன்றம்" ஒன்று முன்பு இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ல–34)

## தடை

தலைமன்னர், ஜூன் 28

ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் மடுத் திருவிழாவுக்கு வரும் யாத்திரிகர்கள் தேக்கம் ஆற்றுப் பகுதியில் குளிப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது.

இவ் ஆற்றுப் பகுதியில் சகதி நிறைந்து காணப்படுவதால் மக்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்பதற்காகவே இவ்வாறு தடை செய்யப்பட்டிருக்கிறது.

(ஜ—286)

## விழா

ஓட்டமாவடி, ஜூன் 28

ஏறாவூர் 4 ஆம் குறிச்சி தமிழ்க் கலவன் பாடசாலை இரட்டை மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் விழா ஜூலை 2 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை மிகத் துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

இப் பாடசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த இடநெருக்கடியை தீர்த்து வைக்குமுகமாக இவ்விரட்டை மாடிக் கட்டடம் அமைக்கப்படும். இதற்கென 5 லட்சம் ரூபா நிதியை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. இராசதுரை ஒதுக்கியிருக்கிறர்.

பாடசாலை அதிபர் திரு. மாணிக்கராசா தலைமையில் நடைபெறவிருக்கும் அடிக்கல் நடும் விழாவில் அமைச்சர் இராசதுரை பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

(ஜ—236)

## நிதி ஒதுக்கீடு

சித்தன்கேணி, ஜூன் 28

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகப் பிரிவில் உள்ள மூன்று வீதிகளைத் திருத்துவதற்காக ரூபா 72 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பாத்திமா வீதிக்கு ரூபா 30 ஆயிரமும் நல்லுணி வீதிக்கு ரூபா 22 ஆயிரமும் ஆஸ்பத்திரி வீதிக்கு ரூபா 20 ஆயிரமும் இதில் அடங்கும்.

இவ் வீதிகளுக்கான திருத்த வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும். (ஜ—283)

# 3 இந்திய மாநிலங்களில் இனக்கலவரங்கள்

## பம்பாயில் 1,000 பேர் கைது
## தடுப்பு நடவடிக்கையில் இராணுவம்

புதுடில்லி, ஜூன் 28

**இந்தியாவின் மூன்று மாநிலங்களில் இனக்கலவரங்கள் தலைதூக்கியுள்ளன, பம்பாய் நகரில் மீண்டும் இந்து—முஸ்லிம் கலவரங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக 1000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளனர். அமிர்தசரஸ் பொற்கோயிலை சீக்கிய யாத்திரிகர்கள் ஆயிரக்கணக்கில் தரிசித்து வருகின்றனர்.**

மகாராஷ்டிரா, பஞ்சாப், அஸ்ஸாம் ஆகிய இந்தியாவின் மூன்று மாநிலங்களில் தோன்றியுள்ள இனக் கலவரங்கள் மேலும் பரவாமலிருப்பதற்காக அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். பம்பாய் நகரில் மட்டும் 1000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளின் போது ஒருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதே வேளை பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய தீவிரவாதிகளைத் தேடி இராணுவத்தினர் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அமிர்தசரஸ் பொற்கோயிலை சீக்கிய இராணுவத்தினர் ஆயிரக் கணக்கில் தரிசித்து வருகின்றனர். ஆனல் இராணுவத்தினர் பொற்கோயிலில் பலத்த கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

யாத்திரிகர்களுடன் ஒன்று சேர்ந்து தீவிரவாதிகளும் உள்ளே நுழைந்து விடலாமென்ற கருத்திலேயே இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென அதிகாரிகள் கூறினர்.

கடந்த திங்கட்கிழமை முதல் பொற்கோயிலைத் தரிசிப்பதற்காக யாத்திரிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அன்று முதல் பொற்கோயிலைத் தரிசித்து வரும் ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் உள்ளே நுழைந்ததும் கோயிலுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தைக் கண்டு அழுத வண்ணம் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

ஒரு நாளைக்கு 6 முதல் 8 மணித்தியாலம் வரை கோயிலைத் தரிசிப்பதற்கு யாத்திரிகர்களுக்கு அனுமதி வழங்கப்படுமென்றும், ஒவ்வொரு தடவையும் குறைந்த அளவிலேயே யாத்திரிகர்கள் உள்ளே நுழைய அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அமிர்தசரஸ் நகரின் பிரதி ஆணையாளர் கூறினர்.

பொற்கோயில் வளவிலிருந்து இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்ற வேண்டுமென சீக்கிய மதத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனல் தீவிரவாதிகளால் ஒளித்து வைக்கப்பட்ட ஆயுதங்களை முற்றிலும் தேடி முடியும் வரை இராணுவம் பொற்கோயிலில் நிலை கொண்டிருக்கும் என அரசாங்கம் கூறி வருகிறது. (ந)

## பஸ் விபத்தில் 33 பேர் மரணம்

டார் அஸ்ஸலாம், ஜூன் 28

டான்சானியாவில் இடம் பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 33 பேர் கொல்லப்பட்டனர். 74 பேர் காயமுற்றனர்.

இவர்கள் பயணம் செய்த பஸ் பாதையிலிருந்து விலகி மரமொன்றில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. 29 பயணிகள் ஸ்தலத்திலேயே மரணமானர்கள். 4 பேர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமுற்றனர்.

இப்பிரதேசத்தில் கடந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற இரண்டாவது பயங்கர பஸ் விபத்து இதுவாகும். முன்னர் நடைபெற்ற விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். (ந)

## உலகச் செய்திகள்

## வங்காள தேசத்துக்கு கடன்

மணிலா, ஜூன் 28

ஆசிய அபிவிருத்தி வங்கி 460 லட்சம் டாலர் சலுகையுடன் கூடிய கடனை வங்காளதேசத்துக்கு வழங்கவுள்ளது.

வங்காளதேச புகையிரத சேவையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இந்தக் கடன் உதவி பயன்படும்.

இந்தக் கடன் 40 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். கருணைத் தவணையாக மேலும் 10 வருடங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகைக்கு சேவைக் கட்டணமாக வருடத்துக்கு 1 சதவீதம் அறவிடப்படும். (ந)

## ஹொங்கொங் எதிர்காலம்: சீனு, பிரி. பேச்சுவார்த்தை

பீகிங், ஜூன் 28

ஹொங்கொங்கின் எதிர்காலத்தைப் பற்றிய பேச்சுவார்த்தைகளை சீனுவும், பிரிட்டனும் நேற்று தொடர்ந்து மேற்கொண்டன.

ஹொங்கொங் பிரதேசம் முழுவதும் சீனுவுக்குக் கீழ் வந்த பிறகு அங்கு வசிக்கும் சீனர்களின் நிலைமை குறித்தும், நகரின் நிர்வாகம் குறித்தும் எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்குள் ஒரு உடன்படிக்கைக்கு வர முடியுமென சீனுவும், பிரிட்டனும் நம்புகின்றன.

ஹொங்கொங்கின் மாகாண சபையை இந்த உடன்படிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லையென முன்னணி சீன அதிகாரிகள் பல முறை கூறி வந்துள்ளனர்.

சீன அரசாங்க ஆலோசனைக் கமிட்டியின் தலைவரான டெங் சியாபிங் சமீபத்தில் தம்மைச் சந்திக்கச் சென்ற ஹொங்கொங் மாகாண சபை அங்கத்தவர்களிடம் இதனை விரிவாகக் கூறினர்.

ஹொங்கொங்கிலுள்ள 50 லட்சம் சீனர்களைப் பற்றி பேசும் உரிமை அவர்களுக்கு இல்லை என்றும். ஹொங்கொங்கின் எதிர்காலத்தைப் பற்றி சீனு ஏற்கனவே தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினர். (ந)

## முறையற்ற ஆயுத விற்பனைக்கு 11 வருட தண்டனை

நியூயோர்க், ஜூன் 28


200 கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்களை ஈரானுக்கு விற்க முயன்ற குற்றத்துக்காக அமெரிக்க ஆயுத விற்பனையாளர் ஒருவருக்கு 11 வருட சிறைத்தண்டனையும், 40,000 டாலர் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

63 வயதான அப்பட் வான் ...

... சம் கொடுத்து போலிப் பத்திரங்களை தயார் செய்து அதன் மூலம் இந்த ஆயுதங்களை ஈரானிலுள்ள சிலருக்கு விற்க முயன்றதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் 150 லட்சம் டாலர்கள் பெறுமதியான 10,000 இயந்திரத் துப்பாக்கிகளை ஐரிஷ் குடியரசு இராணுவத்திற்கு விற்பனை செய்ய முயன்...

## கேலிச் சித்திர ஓவியர்



இலங்கை மத்திய வங்கி

ரூ. 30 கோடி கொண்ட ஆண்டொன்றிற்கு



ஜெர்மன் குடியரசைச் சேர்ந்த கேலிச் சித்திர ஓவியப் பெண் மணியான பார்பரா ஹென்னிங்கர் ஓவியமொன்றைத் தீட்டிக் கொண்டிருக்கும் சமயம் பிடிக்கப்பட்ட படத்தையே மேலே காண்கிறீர்கள்.

38 வயதான இவரது கேலிச் சித்திரங்கள் ஜெர்மனியின் புகழ் பெற்ற பத்திரிகைகள் பலவற்றில் இடம்பெற்றுள்ளன. (ந)

கப்பட்டுள்ளது.

63 வயதான அப்பட் வான் பெகர் என்பவரே இவ்விதம் தண்டனைக்கு உள்ளாகினர்.

இவர் விற்க முயன்ற ஆயுதங்களில் 25 ஹெலிக்கொப்டர்களும், 100 டாங்கிகளும், 60 ஏவுகணைகளும் அடங்குகின்றன.

சுங்க அதிகாரிகளுக்கு லஞ்

[illegible] களை ஈரிஷ் குடியரசு இராணுவத்திற்கு விற்பனை செய்ய முயன்றதாக இவருடன் மேலும் ஐவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆயுத உற்பத்தியாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையில் தரகர்களாக இவர்கள் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. (ந)

# இஸ்ரவேல்-சிரியா கைதிகளை

## பரிமாறிக் கொள்ளும்

டமாஸ்கஸ், ஜூன் 28

இஸ்ரவேலும், சிரியாவும் யுத்தக் கைதிகளை பரிமாறிக் கொள்ளவுள்ளன.

சிரியாவின் கோலான் பள்ளத்தாக்கில், குனெட்ரா நகரில் இன்று இந்தப் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த கைதிகள் பரிமாற்றத்துக்காக பல மாதங்களாக பேச்சுவார்த்தைகளை நடத்தி இருந்தது.

இந்தப் பரிமாற்றத்தின் போது 1982 இல் லெபனன் யுத்தத்தின் போது கைதிகளாக சிறைபிடிக்கப்பட்ட 300 சிரியர்களும் பரிமாற்றிக் கொள்ளப் படுவர்.

இஸ்ரவேல் கைதிகள் எத்தனை பேர் இவ்விதம் பரிமாறப்படுவார்களென்பதைப் பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. (ந)

கார்க் துறைமுகத்தில்

# ஈராக் கப்பல்களை தாக்கினால் பலமான எதிர்த் தாக்குதல்

## ஈரான் எச்சரிக்கை

பாஹ்ரேய்ன், ஜூன் 28

ஈரானின் கார்க் துறைமுகத்துக்கு அருகில் இனிமேல் ஈராக் கப்பல் தாக்குதலை மேற்கொண்டால் பலத்த எதிர்த் தாக்குதலை மேற்கொள்வதாக ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் துறைகளை உபயோகிக்கும் கப்பல்களின் மீது ஈராக் தாக்குதல்களை மேற்கொள்வதைப் பற்றி நேற்று ஈரானிய மந்திரி சபை கூடி விவாதித்தது.

இந்த கூட்டத்தின் பின்னர் ஈரானிய பிரதம மந்திரி மிர் ஹொசேய்ன் மவ்சாவி ஈரானின் மீது நடத்தப்படும் எல்லா தாக்குதல்களுக்கும் பலத்த எதிர்த் தாக்குதல்களை ஈரான் மேற்கொள்ளும் என எச்சரிக்கை விடுத்தார்.

இதே வேளை வளைகுடாவின் வட பகுதியில் மேலும் இரு கப்பல்களைத் தாக்கியுள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

சுவீடிஷ்கப்பலொன்று ஏவுகணைத் தாக்குதல்களுக்கு உள்ளானதை கப்பல் வட்டாரங்கள் உறுதி செய்தன. கார்க் தீவில் எண்ணெய் ஏற்றிய பின் பயணத்தை மேற்கொண்ட போதே இக்கப்பல் தாக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இரண்டாவது கப்பல் தாக்கப்பட்டதைப் பற்றிய தகவல்கள் அறிவிக்கப்படவில்லை.

வளைகுடாவில் இம்மாதம் மேற்கொள்ளப்பட்ட நான்காவது கப்பல் தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வழிமுறைகளை ஜோர்டான், சவூதி அரேபியா, பாகிஸ்தான் ஆகிய இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் புனித நகரான மக்காவில் ஒன்று கூடி ஆராய்ந்ததாக அரபு ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

இஸ்லாமிய புனித தலங்களைத் தரிசிக்குமுகமாக பாகிஸ்தானிய ஜனாதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை சவூதி அரேபியா வந்தடைந்தார்.

42 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய நாடுகள் இயக்கத்தின் மூலம் வளைகுடா யுத்தத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றி இந்த தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவர்.

இதே சமயம் குடிமக்கள் கேந்திரங்களின் மீது குண்டுத் தாக்குதல் நடத்துவதை தவிர்ப்பது தொடர்பாக ஈராக் - ஈரான் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க ஐ. நா. அவதானிகள் குழு ஈரான் வந்து சேர்ந்தது. ஈராக்கிற்கான அவதானிகள் குழுவினர் கடந்த வாரம் தமது கடமைகளை மேற்கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தை மீறி கடந்த செவ்வாய்க்கிழமை ஈராக், ஈரானிலுள்ள குடிமக்கள் கேந்திர நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இதில் மூவர் கொல்லப்பட்டதாகவும் ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது. (ந)

# சீனப்பெருஞ்சுவர் இடிந்து வருகிறது

பீகிங், ஜூன் 28

புகழ்பெற்ற சீனப் பெருஞ் சுவர் இடிந்து வருவதாக சீனப் பத்திரிகை ஒன்று அறிவித்துள்ளது.

வான் ஆய்வு ஒன்றின் மூலம் இச்சுவரின் 16 வீதம் மட்டுமே நிலையாக இருந்து வருவதாகவும், மற்றைய பகுதிகள் இடிந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

தற்போது உல்லாசப் பயணிகள் பார்வையிடும் பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள், அதாவது மூன்றில் இரண்டு பகுதி ஏற்கனவே இடிந்து அழிந்து போயுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்குத் திசையிலிருந்து முற்றுகை நடைபெறுவதை தடை செய்ய சீன அரசர்கள் இந்த பெருஞ் சுவரை நிர்மாணித்தனர். ஆனால் 1215 இல் மொங்கோலிய தளபதி ஜெங்கிஸ் கானின் முற்றுகையை இந்தச் சுவர் தடை செய்ய முடியாமல் போய் விட்டது. 1644 இல் மன்சு படைகளும் இந்த சுவரைத் தாண்டி வந்து பீகிங்குடன் யுத்தத்திலீடுபட்டனர். (ந)

# ரூ. 30 கோடி [illegible] 14 சதவீத இலங்கை மத்திய வங்கியினது ஆறுமாத பிணைகளின் ஏல விற்பனை

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 91 (1) (ஆ) பிரிவிற்கிணங்க இலங்கை மத்திய வங்கி தனது சொந்தப் பிணைகளில் ரூ. 30 கோடி கொண்ட தொகையினை ஏலம் மூலம் விற்பனைக்கு வழங்கவுள்ளது. இது முற்றாக மாற்றக் கூடியதும், புறக்குறிப்பிடுவதன் மூலம் கைமாற்றப்படக் கூடியதும், 6 மாத முதிர்வுக் காலத்தைக் கொண்டதும், ஆண்டுக்கு 14 சத வீத வட்டியைக் கொண்டதுமாகும். இப் பிணைகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி விலைக் குறிப்புகள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் மேற்பார்வையாளரினால் 1984 யூலை 4 புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி விலைக் குறிப்புகள் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தில், வர்த்தக வங்கிகளில் அல்லது கொழும்புத் தரகர் சங்கத்தின் உறுப்பினராகவுள்ள பங்குத் தொகுதித் தரகர்களிடமிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள படிவங்களில் அனுப்பப்பட வேண்டும். வர்த்தக வங்கிகள் தவிர்ந்த ஏனைய கேள்வியாளர்கள் தமது கேள்விக் குறிப்புகளை வர்த்தக வங்கிகள் அல்லது பங்குத் தொகுதித் தரகர்கள் மூலமாகச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அத்தகைய கேள்விக் குறிப்புகள் கேள்வி விலைக் குறிப்புப் படிவத்தில் காட்டப்பட்டவாறு அவ்வர்த்தக வங்கி அல்லது பங்குத்தொகுதித் தரகரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கேள்வி விலைக் குறிப்புக்களை முத்திரை பொறிக்கப்பட்டதும், பொதுப்படுகடன் மேற்பார்வையாளர், இலங்கை மத்திய வங்கி, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு-1 என்ற முகவரியையுடையதும், வெளிப் பக்கத்தில், "மத்திய வங்கிப் பிணைகளுக்கான கேள்வி விலை குறிப்பு" எனக் குறிப்பிடப்பட்டதுமான உறையில் இடப்பட்டு கொழும்பு-1, மத்திய வங்கிக் கட்டடத்தின் தென் கோபுரத்தில் 2ஆம் மாடியில் உள்ள பொதுப்படுகடன் திணைக்களத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கேள்வி விலைக் குறிப்புகள் 1984 யூலை 4 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். எல்லா கேள்வி விலைக் குறிப்புகளும் உறுதியானவையும், மாற்ற முடியாதவையுமாகும்.

எல்லா வங்கித் தொழில் நிறுவனங்களும் (தேசிய சேமிப்பு வங்கி நீங்கலாக) கூட்டு நிலையங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், தொழில் முயற்சிகள், அமைப்புக்கள், சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட நம்பிக்கை நிறுவனங்களும், நிதியங்களும் (ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேம நிதியம் என்பன நீங்கலாக) சட்டத்துறை சார்ந்த தனியாட்கள் என்போர் இப்பிணைகளில் முதலீடு செய்யலாம். அரச திணைக்களங்கள் இப்பிணைகளில் முதலீடு செய்யத் தகுதி வாய்ந்தவையல்ல.

பிணைகளின் முகப்புப் பெறுமதி ரூ. 1,000/-இன் பெருக்குங்களாகவும், பிணை ஒன்றின் ஆகக் குறைந்த முகப்புப் பெறுமதி ரூ. 10,000/- ஆகவும் இருக்கும். பிணைகள் ஆண்டு ஒன்றுக்கு 14 சத வீத வட்டி வீதத்தைக் கொண்டிருப்பதுடன், இது முதிர்வுக் காலப் பெறுமதியுடன் சேர்த்துச் செலுத்தப்படும். பிணைகளின் கொள்வனவு விலை பிணைகள் மீதான பெறுகையைத் தீர்மானிக்கும். தாம் எதிர்பார்க்கும் பெறுகையின் அடிப்படையிலே கேள்வி விலையைக் குறிப்பிட விரும்பும் முதலீட்டாளர்களுக்கு உதவி புரியும் முறையில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம், "முதிர்விற்கான பெறுகை" என்ற அட்டவணையை எல்லா வர்த்தக வங்கிகளிடமும், ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்குத்தொகுதித் தரகர்களிடமும் வழங்கியுள்ளது. ஏலவிற்பனையில் கேள்வி விலைகளைக் குறிப்பிட விரும்பாதோர், தாம் கொள்வனவு செய்ய விரும்பும் பிணைகளின் தொகையினைக் குறிப்பிட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி விலைகளினால் தீர்மானிக்கப்பட்டு கணிக்கப்படும் விலையில் ஒதுக்கீட்டைச் செய்யலாம்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை குறிப்புகளின் கேள்வியாளருக்கு விலைக் குறிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றிய கடிதங்கள் வழங்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் குறிப்புகள் தொடர்பாகச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள், ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தேதியில் மு. ப. 9இற்கு முன்னராக மத்திய வங்கிப் பிணைகள் கணக்கில் என்று குறிப்பிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் சார்பில் வரையப்பட்ட காசோலை மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகைய காசோலைகள் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். தகுதி பெற்ற கேள்வியாளருக்கு கொடுப்பனவாகக் கிடைக்கப் பெற்ற காசோலையின் பெறுமதி அறவிடப்பட்ட பின்னர் உடனடியாகப் பிணைகள் வழங்கப்படும்.

விலைக் குறிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாத கேள்வியாளருக்கு விலைக் குறிப்புகள் நிராகரிக்கப்பட்டமை பற்றிய கடிதங்கள் வழங்கப்படும். எந்த ஒரு அல்லது எல்லா கேள்வி விலைக் குறிப்புகளையும் ஏற்காது விடுவதற்கான அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

பிணைகள் வருமான வரிக்கு உட்பட்டவையாகும்.

மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கல் மீளக் கொடுப்பனவுகள் என்பன தொடர்பான எல்லா விடயங்களிலும் இலங்கை மத்திய வங்கியின் தீர்மானமே முடிவானதாகும்.

இப்பிணைகளின் வழங்கல் மீளக் கொடுப்பனவுகள் தொடர்பான ஏனைய எல்லா நியதிகளும், நிபந்தனைகளும் பொதுப்படுகடன் திணைக்களம், வர்த்தக வங்கிகள் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்குத் தொகுதித் தரகர்களிடமிருந்து பெறப்படலாம்.

பொதுப்படுகடன் மேற்பார்வையாளர்.

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு.
29 யூனி 1984.

# நோன்புப் பெருநாள் உணர்த்தும் படிப்பினை

உலகெலாம் எத்தனை எத்தனையோ பண்டிகைகளும் பெரு நாட்களும்,புண்ணிய தினங்களும் விசேஷ நாட்களும் கொண்டா டப்படுகின்றன.

இஸ்லாமியப் பெருநாட்கள் இரண்டு. ஒன்று "ஈதுல் பித்ரு" என்னும் நோன்புப் பெருநாள். இதனை ஈகைத் திருநாள் என்றும் அழைப்பதுண்டு.

மற்றொன்று இதற்கு இரு மாதத்திற்குப் பிறகு வரும் "ஈதுல் – அல்ஹா" என்னும் தியாகத் திருநாள்.

நோன்புப் பெருநாள் அவ்வாறில்லை, மற்றப் பண்டிகைகளுக்கும் இதற்கும் மிகுந்த வேறுபாடான வித்தியாசங்கள் காணப் படுகின்றன.

கடமையைச் செய்து முடித்த களிப்பு நாள் நோன்புப் பெருநாள். திருப்தி செய்யும் திருநாள் பண்டிகை மற்றதாகும்.

"விசுவாசிகளே! நிச்சயமாக வெற்றியடைந்து விட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால், தம் தொழுகையை மிக்க தாக ஸக்காத் கணக்கிடப்பட்டுள்ளது.

ஸக்காத் கடமையை நிறைவேற்றாதவன் பெருந் தவறு செய்தவனாகின்றான்.

"உங்களின் எஞ்சிய செல்வம் அதன் வழித் தூய்மைப் படுவதற்காகவே அல்லாஹ் உங்கள் மீது ஸக்காத்தைக் கடமையாக்கியுள்ளான்."

என நபி முஹம்மது (ஸல்) அவர்களும் நவின்றுள்ளார்கள்.

**– பதுார்தீன் நிலாமுதீன் –**

இறைமறையில் மட்டுமின்றி மாநபியின் மணி மொழிகளிலும் ஸக்காத்தைப் புறக்கணித்து வாழ்வோர் மறுமையில் அடையும் வேதனை விரிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

ரமழானின் ஒரு மாத காலம் சிறப்பான முறையில் நோன்பை நோற்று ஏழைஎளியோர்களுக்கு வரை முறையோ ஸக்காத் — கூலி தர வேண்டும்?

அதற்கு வானவர்கள்

"எங்கள் இரட்சகா! அந்தப் பணியாளனுக்கு பூரண கூலியையும் தந்தருள்வாயாக" என்று பதிலளிப்பார்கள்.

இந்த விடையைக் கேட்டு இறைவன் கூறுவான்.

"எனது வானவர்களே! நீங்கள் யாவரும் சாட்சியாக இருங்கள். அவர்கள் நோற்ற ரமழான் மாத நோன்புகளுக்காகவும், தொழுத தராவீஹ் தொழுகைகளுக்காகவும், அவர்கள் கொடுத்த ஸக்காத்திற்காகவும், அவர்கள் ஓதிய திருக்குர் ஆனுக்காகவும் அவர்களை நான் பொருந்திக் கொண்டதே அவர்களுக்கான நற் கூலியாகும்.

அவர்களின் எல்லா பாவங்களையும் மன்னித்தருளினேன். அந்த நேரத்தில் இறைவன் ரமனைத் திருப்திப் படுத்தினீர்கள்.

நான் உங்களைப் பற்றித் திருப்தியுறுகிறேன்"

இம் மகத்தான அருட் பேற்றையும், நற் கூலிகளையும் அள்ளி வழங்கும் காட்சியினைக் கண்ணுறும் வானவர்களும் மகிழ்ச்சியில் மூழ்கித் தக்பீர் முழங்குகின்றன.

இந் நன்நாளைப் பெருநாளாகக் கொண்டாடுகின்றனர். இந்த நீண்ட திருவாக்கிலிருந்து நோன்புப் பெருநாளின் காலை நேரம் எவ்வளவு அருள் மிக்கது. அனுக்கிரஹ முடையது, பொன்னானது என்பது தெளிவாகி விடுகிறது.


ஒரு மாத காலம் பசித்திருந்து விழித்திருந்து ஆத்மார்த்த முன்னேற்றத்தை அடைந்து விட்டோம். உள்ளத்தை, உடலை, எண்ணத்தை, செயலை, இல்லறத் துறவற வாழ்வைச் செம்மைப் படுத்திக் கொண்டோம்.

இறைவனைத் தொழுது, திருக் குர்ஆன் ஓதி, ஓதி உள்ளத்தில் பயிற்சியின் அடிப்படையில் வரும் பதினொரு மாதங்களும் வாழும் வலிமையைத் தருமாறு நாம் அல்லாஹ்விடம் இறைஞ்ச வேண்டும்.

திருநபி (ஸல்) அவர்கள் அன்று இறைவனை இறைஞ்சினார்கள். முஸ்லிம்களும் அவ்வாறே இறைஞ்ச வேண்டும்.

இந்த இறைஞ்சலுடன் தான் முஸ்லிம்கள் தக்பீர் முழங்கி பெருநாள் மகிழ்ச்சியை நிறைவு படுத்திக் கொள்ள வேண்டும். மலரும் நோன்புப் பெருநாளை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.



கல்முனை ஆஸ்பத்திரிக்கு வரும் முஸ்லிம்கள் தமது ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்கென அங்கு அமைக்கப்பட்டிருக்கும் பள்ளி வாசலின் அழகிய தோற்றத்தைப் படத்தில் காண்க. (எ– 217) [படம். எ. எல். எம். சலீம்]

# உலக மொழிகளில் புனிதமிகு குர்ஆன்

திருக்குர்ஆன் உலகின் அனைத்து மக்களுக்கும், வெவ்வேறு வேதங்களைப் பின்பற்றுபவர்களுக்கும், வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்களுக்கும் பொதுவாக அருளப்பட்டது.

அபிஸீனிய, ஆபிரிக்க, அப்பிக்கானியா, அல்பேனியன், அல்ஜாமியடோ, அரக்கோனியன், ஆர்மேனியா, அஸ்ஸாம், அஜாரி.

பலுச்சி, பம்பாரா, பங்களா, பாஸ்கியூ, பெர்பர், பொஹ்மியன், பொர்னு, போஸ்நியூக், பிரிட்டோ.

புரோஹுய், பல்கேரியா, பர்மா, கம்பூச்சியன், காஸ்டிலான், காட்டலான், சீனம், கோமோரியன், கொரியன்.

கோடோகோலி, கிரியோல், கிராஅட், தக்னி, டேனிஸ், தியோலா, டச்சு, ஆங்கிலம், எஸ்பரொண்டோ,

எஸ்தோனியன், இவ்ஹி, பிலிப்பினோ, ஃபெனிஸ், பிலமண்ட், பென், பிரஞ்சு, ஃபிரிசன், ஃபுலட்டோ (பியூல்).

ஆனுக்குச் சீன மொழியில் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது. அவை இலக்கிய மொழியில் ஆனவை. இதனால் இது சாதாரண சீனர்களுக்குப் புரியாதிருந்தது.

பேராசிரியர் முகம்மது மக்கீன் 1939 இல் மொழி பெயர்ப்புப் பணியைத் துவக்கினார். சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்பட்டு ஓராண்டுக்குப் பிறகு அது முழுமைப் படுத்தப்பட்டது.

அந்த நவீன சீன மொழி பெயர்ப்பு வெளி வருவதற்கு முன்பே பேராசிரியர் மக்கீன் 1978 இல் காலமானார்.

1949 ஆம் ஆண்டில் எகிப்தின் அல் – அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான சீன முஸ்லிம் அறிஞர் மார்ஜின் திருக்குர் ஆனின் ஆறு (6) ஜுஸ்வுகளுக் மொழி பெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

அவை முறையே, ஹபீப் முஹம்மது அல் காஹிரி எழுதிய அல் ஃபுதூஹாத் அல் ரஹ்மானியத், சுலைமான் இபின் முஹம்மது அல் சைலானி (கொழும்பு) எழுதிய, ரஹ்மத் அல் மன்னன் ஆகியவையாகும்.

முதலாவது 1879 இலும், இரண்டாவது 1897 இலும் வெளிவந்தது எனக் கூறுகின்றனர்.

அடுத்து காயல் பட்டினம் நூஹ்லெப்பை ஆலிம் சாஹிபு அளித்த மொழி பெயர்ப்பு விரிவுரையுடன் கூடியது. தப்சிரே பத்ஹுல் கரீம் எனும் பெயரிலான இதுவும் அரபுத் தமிழில் ஆனதேயாகும்.

தொடர்ந்து தூய பாணியில் திருநெல்வேலிப் பேட்டை கா.

**– என். மொஹமட் –**

# தினபதி இஸ்லாமிய பூங்கா

**தயாரிப்பு: எப். எம். பைரூஸ்**

உள்ளச்சத்தோடு தொழுவார்கள்.

அவர்கள் வீணான காரியங்களிலிருந்து விலகி இருப்பார்கள். அவர்கள் ஸக்காத்தும் கொடுத்து வருவார்கள்."

(23:1–4)

"எவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்து தொழுகையைக் கடைப் பிடித்தும், ஸக்காத்தும் (மார்க்க வரியும்

தானமும் தருமமும் ஈந்து, மாட்சிமைமிக்க அருள் நிறைந்த ரமழானின் கடைசி தினமும் கழிந்து ஷவ்வால் மாதத்திய சூரியன் உண்மை இறை தூதையும் இஸ்லாத்தின் நற்செய்தியையும், தாங்கித் தனிப்பட்ட உவகையுடன் தனது பொன்னிறக் கிரணங்களை இப்பரந்த பாரினிலே பரப்பிக் கொண்டு உண்மை முஸ்லிம்களுக்கு நல்லாசி நவின்றவாறே இன்னும் சில தினங்

மூான் மாதத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்ட தனது உத்தம அடியார்களை நோக்கிக் கூறுகிறான்:—

"என்னுடைய அடியார்களே! என்னிடமே எதையும் கேளுங்கள். எனது கண்ணியம், மேன்மை கருணை, உயர்வு மேலான அந்தஸ்துக்கள் மீது ஆணையாக — இந்தப் பொதுக் கூட்டத்தில் இம்மை, மறுமைக்கான சர்வ நலன்களையும் உங்களுக்கு அளிக்

ஒளியேற்றிக் கொண்டோம்.

ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும், அநாதைகளுக்கும் அள்ளி, அள்ளி வழங்கினோம் – என்றெல்லாம் மன நிறைவு கொண்டவர்கள் முழங்கும் அந்தத் தக்பீரில் எத்தனை உயிர்த்தன்மை பொதிந்திருக்கிறது. அல்ஹம்து லில்லாஹ்"

கடமையை ஆற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் கொண்டாடும் நாளே இந்நன்நாள்.

எவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்து தொழுகையைக் கடைப் பிடித்தும், ஸக்காத்தும் (மார்க்க வரியும்) கொடுத்து வருகின்றனர்களோ அவர்களுக்கு, அவர்களுடைய கூலி நிச்சயமாக அவர்கள் இறைவனிடம் உண்டு.

அன்றி, அவர்களுக்கு (மறுமையில்) எவ்விதப் பயமுமில்லை. அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள்." 2:277

"அன்றி, ஸக்காத் கொடுக்காதவர்களுக்கும் மறுமையை நிராகரிப்பவர்களுக்கும் (கேடுதான்) என்பதாக திருமறையின் ஹாமீம் ஸஜ்தா அத்தியாயத்தின் ஏழாவது வசனம் நவில்கின்றது.

முஸ்லிம்களின் கடமைகளை எடுத்துக் காட்டும் வகையில், திருமறை திருக்குர் ஆனில் ஏறத்தாழ 82 இடங்களில் தொழுகையும் ஸக்காத்தும் இணைத்தே கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு முஸ்லிமும் தன் வாழ்வின் அவசியமான தேவைகள் போக மீதமாகும் பொருளிலிருந்து நாற்பதில் ஒரு பகுதியைக் கணக்கிட்டு உரியவர்களுக்குக் கொடுக்குமாறு விதிக்கப்பட்டுள்ளது.

பணத்திற்கு மட்டுமன்றித் தம்மிடமிருக்கும் தங்கம், வெள்ளி கால் நடைகள், உற்பத்திப் பொருட்கள் முதலியவற்றிற்கும் உரிய முறையில் ஸக்காத் செலுத்தியாக வேண்டும். என்ப

ணங்களை இப்பரந்த பாரினிலே பரப்பிக் கொண்டு உண்மை முஸ்லிம்களுக்கு நல்லாசி நவின்றவாறே இன்னும் சில தினங்களில் உதயமாகவிருக்கின்றான்.

இந் நன்நாளைப் பற்றி நற்குணத்தின் தாயகம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

"ஷவ்வால் மாத ஆரம்ப தேதியாகிய, நோன்புப் பெருநாளின் காலை உதயமானதும் அல்லாஹ் தனது வானவர்களை ஊர்கள் தோறும் அனுப்பி வைக்கிறான்.

அவர்கள் பூபாகத்தில் இறங்குகின்றனர். இவர்கள் "முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தவர்களே! தயாள ரட்சகனை உங்கள் இறைவனை அல்லாஹ்வின் திருச் சன்னதிக்குச் செல்லுங்கள்-

அவன் உங்கள் மீது தன் அருளைச் சொரிகின்றான். பெரும், பெரும் வெகுமதிகளை அளிக்கின்றான். மாபெரும் பாபங்களையும் மன்னித்தருள்கிறான்.

முஸ்லிம்கள் ஈத் தினத்தன்று இறைவனைத் தொழ ஒன்று கூடிவிட்டதும், இறைவன் தனது வானவர்களை நோக்கி வினவுகிறான்:

"எனது வானவர்களே! பணியாளன் தனது பணியைப் பூரணமாகச் செய்து முடித்து விட்டால், அவனுக்கு நான் என்ன

...தஸ்துக்கள் மீது ஆணையாக — இந்தப் பொதுக் கூட்டத்தில் இம்மை. மறுமைக்கான சர்வ நலன்களையும் உங்களுக்கு அளிக்கிறேன்.

என் வல்லமை மீது ஆணையாக நான் உங்களை இழிவு படுத்த மாட்டேன். இன்னும் நீங்கள் என் அருளைப் பெற்றுத் திரும்புங்கள், நீங்கள் அனைவரும் மன்னிக்கப்பட்டு விட்டீர்கள். நீங்கள் என்

...லாஹ்"

கடமையை ஆற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் கொண்டாடும் நாளே இந்நன்நாள்.

ஈத்துவக்கும் இந்த ஈகைத் திருநாளின் இன்பத்தினை, மகிழ்ச்சியைப் பூரணமாக அடைவதற்கு இயலாதவர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் அள்ளி வழங்கி அவர்களையும் ஈதில் மகிழச்சியுறச் செய்ய வேண்டும்.

ஒரு மாத காலம் பெற்ற

# ஏழைகளின் கண்ணியங்கள்

ஏழைகளில் பொறுமையாகவும் இறைவனுக்காக அந்தரங்க சுத்தியாகவும் இருந்தவர்களுக்குச் சீமான்களுக்கில்லாத மூன்று கண்ணியங்கள் இருக்கின்றன.

அவையாவன:—

(1) சுவர்க்கத்தில் சிவந்த மாணிக்கத்தாலான ஒரு மாளிகை இருக்கின்றது. இவ்வுலகவாசிகள் விண்ணில் நட்சத்திரத்தைப் பார்ப்பது போல, அம் மாளிகையை சுவர்க்கத்து வாசிகள் பார்ப்பார்கள். அம் மாளிகையில் பக்கீரான நபீ, பக்கீரான ஷஹீது பக்கீரான மூமின் ஆகியவர்களைத் தவிர்த்து வேறு யாரும் பிரவேசிக்க மாட்டார்கள்.

(2) பாதி நாளுக்கு அதாவது இவ் உலகத்தில் 500 வருஷங்களுக்கு முன்னதாகவே சீமான்களுக்கு முன்னர் சுவர்க்கத்தில் ஏழைகள் பிரவேசித்து விடுவார்கள்.

(3) ஏழை அந்தரங்க சுத்தியுடன் "ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலா இலா இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் (அல்லாஹ் தூயவன்- இன்னும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே தகும்.

இன்னும் அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறு) நாயனில்லை. இன்னும் அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறுவானாயின் இதனால் ஏழைக்குக் கிடைக்கும் சிறப்பைச் செல்வந்தர்கள் அடைய மாட்டார்கள்.

நன்மையும் இரட்டிக்கப்படும். அதனுடன் பதினாயிரம் திர்ஹம்களை அச் செல்வந்தன் செலவு செய்த போதினும் சரியே.

இவ் விதமாகத்தான் நன்மையான காரியங்கள் யாவும்"

இவ்வாறு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

தொகுப்பு:—

— அப்துல் மௌஜூத்

# பொன்மொழிப் பேழை

* "நாயகமே! செல்வந்தர்கள் நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்கின்றனரே, நாங்கள் தொழுவது போல் அவர்களும் தொழுகின்றார்கள்".

"நாங்கள் நோன்பு நோற்பது போல் அவர்களும் நோன்பு நோற்கின்றார்கள். ஆனால் அவர்கள் எங்களை விடக் கூடுதலாக தங்களின் தேவைக்கு மேல் மிதமிஞ்சிய பொருட்களை அறம் செய்து விடுகிறார்களே, எங்களால் அவ்வாறு செய்ய முடியவில்லையே" என்று சிலர் கேட்டார்கள்

அதைக் கேட்ட அண்ணல் நபியவர்கள்.

"ஏன் அல்லாஹ் உங்களுக்கு நீங்கள் அறம் செய்யக்கூடியதை அளிக்கவில்லையா?".

நிச்சயமாக "சுபஹானல்லாஹ்" என்கின்ற தஸ்பீஹும் அறம் தான்.

அல்லாஹு அக்பர் என்ற தக்பீரும் அறம்தான்.

"அல்ஹம்துலில்லாஹ்" என்ற தஹ்மீதும் அறம்தான்

"லாயிலாஹ இல்லல்லாஹ்" என்கின்ற தஹ்லீலும் அறம் தான்.

மேலும் நற்செயல்களை செய்யுமாறு பிறரை ஏவுவதும், தீய செயல்களை விட்டு விடுமாறு விலக்குவதும் அறம்தான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: ஹஸரத் அபூதர் (ரலி). ஆதாரம்: முஸ்லிம்.)

* "தர்மம் செய்வதில் தீவிரமாய் இருங்கள். ஏனெனில் தர்மத்தைத் தாண்டிக் கொண்டு துன்பங்கள் (பலாய், முஸீபத்துக்கள் உங்களை) வந்து அணுகா" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: ஹஸரத் அலீ (ரலி). ஆதாரம்: ரஜீன்.)

* நாயகமே! எந்தத் தர்மம் மிகவும் மேலானது?" என்று வினவப்பட்டதற்கு "முடையின் சிரமத்தோடு செய்யப்படும் தர்மமென்றும். (ஒருவர்) தன் குடும்பத்தாரிலிருந்து துவங்கும் தர்மமென்றும்" அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஹஸரத் அபூஹுரைரா (ரலி). ஆதாரம்: அபூதாவூத்.)

* "யாசிப்பவர்க்கு (பெற) உரிமை உண்டு. — அவர் புரவி மீது இருந்து வந்த போதிலும் சரி" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஹஸரத் அலீ (ரலி). ஆதாரம்: அபூதாவூத்.)

* "தர்மம் செய்வதால் பொருள் குறைந்து விடுவதில்லை. இறைவன் மன்னிப்பதால் அடியாரின் கண்ணியம் உயர்ந்து விடுகின்றது.

எந்த அடியார் அல்லாஹ்வுக்காகத் தாழ்ந்து போகின்றாரோ, அவரை அவன் உயர்வாக்கி வைக்கின்றான்" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அறிவிப்பவர்: ஹஸரத் அபூஹுரைரா (ரலி). ஆதாரம்: முஸ்லிம், முஅத்தா, திர்மிதீ.)

[தொகுப்பு: எஸ். எல். எம். சாலிஹ்]

எஸ்தோனியன், இவ்ஹி, பிலிப்பினோ, ஃபெனிஸ், பிலமண்ட், பென், பிரஞ்சு, ஃபிரிசன், ஃபுலுட்டோ (பியூல்).

காயிலீக், காலா, ஜெர்மனி, ஜியோஜியன் (குருஸ்), கிரேக்கம், குஜராத்தி.

குர்முகி, ஹவ்ஸா, ஹிப்ரு, ஹிந்தி, ஹங்கேரியன், இந்தோனேசியா (ஜாவா மொழி), ஐரிஸ், ஐலண்டிஸ், இத்தாலி.

ஜப்பான், ஜிடீஸ், கனரீஸ், காஷ்மீர், கரஜா (சிவப்பு இந்தியர் – பிரேசில்) கவ்கானி, சிக்காங்கோ, கீவா, கோரேபுரோ, குஹிஸ்தானி, லேப்லாண்டிஸ்.

குர்திஸ், லத்தீன், லட்விடன், லிங்காலா, லோவியன்டீஸ், லுக்காண்டா, மாய்மானி, மோரானு (பிலிப்பின்ஸ்), மாஜின்டானேவ், மக்காஸாரி, மால்காச்சி.

மலையாளம், மலங்கி, மால்தாச்சி, மராட்டி, முல்தானி, நோர்வீஜியன், ஓரியா, ஔலூப், புஸ்டோ.

பாளி (நேபாளம்), பஞ்சாபி, பெர்சியன், பிளாட்யோஸி, பொலிஷ், புரோடிகீஸ், புரோவென்சல், ரோமன்ஸ், ருமேனியன், ரஷ்யன், சமஸ்கிருதம், சரோக்கோலா.

ஸ்கோட்ச், ஹெரிபியன், இந்தி, சிங்களம், சோஸி, ஸன்ராய், ஸ்பெனிஸ், சூடானிஸ், சூவாஹிலி, சுவிடிஸ், சிரியாக், தமிழ்.

தெலுங்கு, தாய்லாந்து, திசிலிபூ, துருக்கி, தாக்கிஸ்தானியன், உக்ரேனியன், உருது, லோலப்புக், யாருபா, யோருபா, ஜூலு, ஆகிய மொழிகளில் குர்ஆன் மொழி பெயர்க்கப் பட்டது.

இவற்றுள் முழுமையான மொழி பெயர்ப்பு கண்ட மொழிகள் 80 ஆகும். மீதமுள்ள 46 மொழிகளில் திருக்குர்ஆன் சில பகுதிகளில் மொழி பெயர்க்கப் பட்டு விட்டன.

முழுமை படுத்தும் பணியும் தொடர்கிறது. இவையன்றி வேறு மொழிகளிலும் மொழியாக்கம் காணும் முயற்சி செய்யப்பட்டு வருகின்றது.

திருக்குர்ஆனைப் பிற மொழிகளில் பெயர்க்கும் பணி "பெர்ஷியன்" மொழியில் துவக்கப்பட்ட காலம் ஹிஜ்ரி இரண்டாம் நூற்றுண்டாகும்.

அதே காலத்தில் ஆபிரிக்க மொழி இனங்களில் ஒன்றான "பெர்பெர்" மொழியில் திருக்குர்ஆன் பெயர்க்கப்பட்டுள்ளது.

இலத்தீன் மொழியில் ராபர்ட் என்பவரின் மொழி பெயர்ப்பு 13 ஆம் நூற்றுண்டில் வெளிவந்துள்ளது. மிகுந்த எதிர்ப்புக்கிடையில் மார்டின் லூதரின் நேரடியான தலையீட்டின் காரணத்தால் 1542 இல் ஒரு திருக்குர்ஆன் மொழி பெயர்ப்பு நூல் வெளிவந்துள்ளது.

செஞ்சினக் குடியரசில் 1920, 1930 ஆம் ஆண்டுகளில் திருக்குர்...

காண மொழி பெயர்ப்பை வெளியிட்டார்.

இப்போது முழுமையான அவருடைய மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டு விட்டது. அவருடைய பணி முழுமை பெற ஏறத்தாழ 35 ஆண்டுகளாயின.

இஸ்லாமிய பூங்கா வாசகர்களுக்கு 'ஈத்' முபாரக் வாழ்த்துக்கள்!

மேலை நாட்டு மொழிகளான, ஆங்கிலத்தில் 85 மொழி பெயர்ப்புகளும், ஜெர்மனிய மொழியில் 43 மொழி பெயர்ப்புகளும், இலத்தீன் மொழியில் 43உம், இத்தாலிய மொழியில் 12உம், பிரெஞ்சு மொழியில் 36உம், ரஷ்ய மொழியில் 11 மொழி பெயர்ப்புகளும் வெளி வந்துள்ளன.

தமிழ் மொழியைப் பொறுத்தளவில் அரபுத் தமிழில் இரண்டு மி. அப்துல் காதிர் ராவுத்தர் அழகிய தமிழ் நடையில் மொழி பெயர்ப்பைக் கொண்டு வந்தார்.

இராமநாதபுரம் ப. வெ. காதிர் முஹியத்தின் ஆலிம் சாஹிபு தமிழாக்கம் செய்த "அம்மயத்" ஜுஸ்வு மட்டும் வெளி வந்தது.

பின்னர் மீண்டும் அரபுத் தமிழில் ஆக்கம் கண்ட மொழி பெயர்ப்பு "துரருத் தப்ஸீர்" என்பதாகும். இதனைத் தந்தவர் புது நகரம் கதீப் ஸயீத் முஹம்மது ஆலிம் சாஹிபு.

இது ஹிஜ்ரி 1342 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது.

மௌலவி ஆ. கா. அப்துல் ஹமீது (பாகவி) அவர்களின் எளிய தமிழிலான மொழி பெயர்ப்பு 1949 இல் வெளி வந்தது.

அறிஞர் பா. தாவூத் ஷா, மௌலவி பி. எஸ். கே. முஹம்மது இப்ராஹீம், மௌலவி இ. மு. அப்துர் ரஹ்மான் பாகவி ஆகியோருடைய மொழி பெயர்ப்புக்களும் புகழுக்குரியவை.

— என். மொஹமட் —

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1404 — ரமழான் பிறை 28

## ஈதுல் — பித்ர் சங்கற்பம்

"ஈதுல் — பித்ர்" நோன்புப் பெருநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாட இருக்கிறோம்.

ஒரு மாத காலம் நோன்பு நோற்ற பின் பெருநாளன்று நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

ஐம்பெருங் கடமைகளுள் ஒன்றை முழுமையாக இனிதே நிறைவேற்றிய பூரிப்பில் திளைக்கப் போகும் நாம், நோன்பு பெருநாள் சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்- இது அவசியம்.

"ஈதுல் — பித்ர்" ஈகையின் பெருமையை உணர்த்தும் பெருநாள். இந்த உண்மையை நாம் உணர வேண்டும்.

நாம் மட்டும் புத்தாடை அணிந்து, வயிறு புடைக்க விருந்து உண்டு மகிழ்ந்தால் எமக்குப் பெருநாட் பலன் கிட்டாது.

ஈகைப் பண்பால் நாம் எம்மைச் சிறந்தவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாதோருக்கு அள்ளிக் கொடுப்பதும், வசதி அற்றவர்களுக்கு இயன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் மிக அவசியம்.

"உங்களுக்குப் பிரியமானவற்றில் இருந்து நீங்கள் தருமம் செய்யாதவரை புண்ணியம் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள்.

"ஒரு சொற்பத்தை நீங்கள் தருமம் செய்த போதிலும் அல்லாஹ் நிச்சயமாக அதையும் நன்கு அறிவான்."

இவ்வாறு இறைமறையாம் அல்குர்ஆன் ஈகையைப் பற்றி விளக்கம் அளிக்கின்றது.

ஆகவே —

ஈகைப் பெருநாளாம் "ஈதுல் பித்ர்" நோன்புப் பெருநாளில் ஈகைப் பண்பு படைத்தவர்களாக நாம் மாற வேண்டும்.

அதுவே எமது பெருநாள் சங்கற்பமாக இருக்க வேண்டும்.

ஈத்முபாரக்!

## வானொலி

காலை
5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப்பாடல்கள்
6.00 சைவநற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப்பாடல்கள்
7.00 தலையே நீ வணங்காய்: கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்
7.30 மாகாணச்செய்திகள்
7.35 நாதஸ்வரம் — மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்கள்
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
மாலை
6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 ஞானமிர்தம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
இரவு
8.00 உலகச்செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 இல்லறஜோதி
8.40 நாட்டுப்பாடல்
8.45 பேச்சு — சமூகத்தில் குற்றவாளிகளின் நிலை — ஆர் சிவகுருநாதன்
9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப்பாடல்
9.45 தாளவாத்தியக் கச்சேரி அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு
10.15 பக்திப்பாடல்கள்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 நே யுவர் கண்ட்ரீ
5.35 "தாயகு"
6.00 விளையாட்டுப் பயிற்சி
6.25 பிளேஹவுஸ்
6.55 செய்திகள் தமிழ்
7.15 வன விலங்குகள்
7.45 "கீத வாஹினி"
8.15 செய்திகள் சிங்களம்
8.35 பியூசர் அட்ரக்சன்ஸ்
9.00 வீக் என்ட் மூவி ஆங்கிலம்
9.30 செய்திகள் ஆங்கிலம்
9.50 வீக் அன்ட் மூவி தொடர்ச்சி
10.30 உலகச் செய்திகள்
10.35 வீக் என்ட் மூவி தொடர்ச்சி

### ஐ. டி. என்.

6.31 3-2-1 தொடர்பு கொள்ளுங்கள்
7.00 கீத தாரு
7.30 நகைச்சுவை
[illegible]

# தமிழ்நாட்டு போதனாசிரியர் இலங்கை வருகை

## இலங்கை டேபிள் டென்னிஸ் கட்டுப்பாட்டுச் சபை ஏற்பாடு

தமிழ் நாட்டிலிருந்து டேபிள் டென்னிஸ் போதனாசிரியர் ஒருவரை வரவழைப்பதற்கு இலங்கை டேபிள் டென்னிஸ் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

தமிழ் நாட்டு மாநிலத்தின் முன்னணி டேபிள் டென்னிஸ் போதனாசிரியரான திரு. வி. இராமச்சந்திரனே இவ்விதம் இலங்கை வரவுள்ளார்.

ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு வரும் இவர் 6 வாரகாலம் இங்கு தங்கியிருப்பார்.

அக் காலகட்டத்தில் இலங்கையின் டேபிள் டென்னிஸ் வீரர்களுக்கு முக்கியமாக கனிஷ்ட வீரர்களுக்கு இவர் பயிற்சியளிப்பார் என த் தெரிகிறது.

இலங்கையின் கனிஷ்ட டேபிள் டென்னிஸ் வீரர்களை முன்னேற்றுவதில் கட்டுப்பாட்டுச் சபை அக்கறையுடன் இருப்பதாகவும், அதன் காரணமாகவே பாடசாலைகளின் விடுமுறை காலமான ஆகஸ்ட் மாதத்தில் பயிற்சிகளை நடத்த தீர்மானித்ததாகவும் சபையின் செயலாளர் கூறினார்.

தமிழ் நாட்டு போதனாசிரியரின் சேவைகளுக்காக 50,000 ரூபா வரை சபை செலவு செய்யுமென அவர் குறிப்பிட்டார்.

கொழும்புப் பிரதேசத்தி லுள்ள பாடசாலைகளில் டேபிள் டென்னிஸ் விளையாட்டை அபிவிருத்தி செய்ய புதிய திட்டமொன்றை வகுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த வருடத்தில் 4 கட்டுப்பாடற்ற டேபிள் டென்னிஸ் சுற்றுப் போட்டிகளை நடத்தியுள்ளது. 39 ஆவது தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியும் இதில் அடங்குகிறது. தேசிய போட்டியை அரசவர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் அனுசரணை செய்தது.

இலங்கையிலிருந்து பாஹ்ரேய்ன், இந்தியா ஆகிய நாடுகளுக்கு போட்டிகளில் கலந்து கொள்ள இரு டேபிள் டென்னிஸ் அணிகளை சபை அனுப்பி வைத்ததாக அவர் மேலும் கூறினார். (ந)

## விளையாட்டுப் பகுதி

## தேசிய கிரிக்கெட் அணியின் உதவி நிர்வாகி பதவியிலிருந்து அனுரா விலகுகிறார்

கொழும்பு, ஜூன் 29

கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் முகமாக இங்கிலாந்து செல்லும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு உதவி நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்ட அனுரா தென்னக்கோன், இப் பதவியிலிருந்து விலகிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

இவர் இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக் குழுவின் அங்கத்தவராவார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான அனுரா தென்னக்கோன் 13 உத்தியோகப் பற்றற்ற டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணியைத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு 1982 இல் சுற்றுலா சென்ற இலங்கை கிரிக்கெட் அணிக்கு இவர் நிர்வாகியாக உடன் சென்றார்.

இங்கிலாந்து செல்லும் அணியின் உதவி நிர்வாகி பதவிக்கு மற்றுமோர் முன்னாள் இலங்கை அணியின் வீரர் ரஞ்சித் பெர்னாண்டோ தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிகிறது. (ந)

## இம்ரன்கான் நவம்பரில் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில்

லண்டன், ஜூன் 28

பாகிஸ்தானைச் சேர்ந்த சகல துறை கிரிக்கெட் வீரரான இம்ரான் கான் மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

31 வயதான இவர் பாகிஸ்தான் அணிக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஆனால் கடந்த பல மாதங்களாக தமது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு ஒன்றினால் இவர் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தார்.

அண்மையில் இங்கிலாந்தின் பிராந்திய அணியான சஸ்ஸெக்ஸ் அணிக்கு பிராந்திய கிரிக்கெட் போட்டிகளில் இவர் கலந்து கொள்ளவிருந்தார். ஆனால் வைத்திய ஆலோசனையின் பேரில் தமது முடிவை மாற்றிக் கொண்டார்.

நவம்பர் மாதம் முதல் இவர் மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் ஈடுபடுவாரென சஸ்ஸெக்ஸ் அணியின் கிரிக்கெட் போதனாசிரியர் ஒருவர் கூறினார். (ந)

## இன்றைய திரைகளில்

6வது வாரம்!

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)

சரஸ்வதி
(திருமலை)
6-00 9-30
10.30, 2.30, 6.00, 9.30

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

## வானொலி அனுமதி பத்திரம் பெறுவதில் ஒரு சிக்கல்

### தபால் மா அதிபரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 29

தீயில் எரிந்து போன வானொலி, தொலைக்காட்சி அனுமதிப் பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி வற்புறுத்துவது மனிதாபிமானமற்ற செயலாகும்.

தபால் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இ. தொ. கா. பொதுச் செயலாளரும், கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

சமர்ப்பித்த போதும் அவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதனால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவர்கள் தமது புதிய அனுமதிப் பத்திரங்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு இழந்த பழைய அனுமதிப் பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி வற்புறுத்துவது மனிதாபிமானமற்ற செயலாகும்.

எனவே வன்செயல்களின் போது தமது பழைய அனு...

## கரபந்தாட்ட இறுதிச்சுற்று ஜூலை 1 ஆம் திகதி

கொட்டகலை, ஜூன் 28

...

வரும் ஜூலை மாதம் ...

## தேசிய உதைபந்தாட்ட அணி இரு வெற்றிகள்

கொழும்பு, ஜூன் 29

ஆசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ...

நய்மு மொஹமட் (2): பாலேந்திரன் ஆகியோர் தேசிய அணியின் கோல்களைப் பெற்றனர்.

7.00 இத தாரு
7.30 நகைச்சுவை
8.00 பிளக் அன்ட் வைட் மின்ஸ்ரல்சோ
9.00 பயனிக் வுமன்
9.30 செய்திகள் ஆங்கிலம்
9.45 பயனிக் வுமன் தொடர்ச்சி

கொட்டகலை, ஜூன் 28

ஸ்டோனிகிளிப் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினர் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்று, எதிர் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இப்போட்டியில் இறுதியாக கலந்து கொள்ளும் பிரிவுகள் வருமாறு:—

ஸ்டோனிகிளிப் "ஏ", சலங்கண்டி "ஏ" பிரிவு, கன்னியப்பு "ஏ" பிரிவு, அட்டன் நகர் "ஏ", கொண்டகொல்லை "ஏ", மேபீல்ட் பீ" மேபீல்ட் "ஏ", தெலிவத்தை கல்மதுரை "ஏ", கொணக்கொலை "ஏ" ஆறுக்குவாடி.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தோட்ட நிர்வாகி திரு. தீனதயாளன் பரிசுகள் வழங்குவார்.

அமைப்பாளர்களாக திரு. தர்மதாச, திரு. வீ. சிவசாமி ஆகியோர் கடமையாற்றுகின்றனர். (ந-164)

ஆசிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளுமுகமாக தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வரும் தேசிய உதை பந்தாட்ட அணி, கண்டி உதைபந்தாட்ட லீக், அனுராதபுரி மாவட்ட அணி ஆகியவற்றுக்கு எதிரான இரு கண்காட்சிப் போட்டிகளிலும் வெற்றியீட்டியது.

கண்டி உதை பந்தாட்ட லீக் அணிக்கு எதிரான போட்டியில் 3–0 கோல்களால் தேசிய அணி வெற்றி பெற்றது. இடைவேளையின்போது 1–0 கோல்களால் தேசிய அணி முன்னணியில் நின்றது.

பாலேந்திரன் ஆகியோர் தேசிய அணியின் கோல்களைப் பெற்றனர்.

அனுராதபுரி மாவட்ட அணிக்கு எதிரான போட்டியில் 4–0 கோல்களால் தேசிய அணி வெற்றி பெற்றது.

எல்லா கோல்களும் இடைவேளையின் பின்னரே பெறப்பட்டன.

மஹிந்த பெர்னண்டோ, நய்ஞ மொஹம்மட், லக்ஸ்மன் வீரவடுகே. மார்கஸ் பெர்னண்டோ ஆகியோர் தேசிய அணியின் கோல்களைப் பெற்றனர்.

ஏ. எஸ். குணரட்ணம் இப்போட்டியின்போது மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (ந)

சாமி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த வன்செயலின் போது பலருடைய வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகளின் அனுமதிப் பத்திரங்கள், தீயில் அகப்பட்டுக் கருகிப் போயின.

தமது அனுமதிப் பத்திரங்களை இழந்தவர்கள் 1984 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரங்களைக் கொண்டு வரும்படி வற்புறுத்தப்படுகின்றன.

தம்முடைய பழைய அனுமதிப் பத்திரங்களை இழந்ததை உறுதிப்படுத்தும் பொலீஸாரின் முறைப்பாட்டுப் பிரதிகளை

போது தமது பழைய அனுமதிப் பத்திரங்களை இழந்தவர்களுக்கு எவ்விதமான மேலதிக கட்டணமும் இன்றி 1984 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டும்.

பொலீஸ் முறைப்பாட்டு பிரதிகளை சமர்ப்பிப்போருக்கு புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்கச் சகல தபாற் காரியாலயங்களுக்கும் உத்தரவிட வேண்டும்.

இப்படி திரு. செல்லச்சாமி தபால் மா அதிபரைக் கேட்டிருக்கிறார். (ண-ய)

# பாடசாலைகளின் கிரிக்கெட் போட்டிகள்

கொழும்பு, ஜூன் 29

சென் செபஸ்டியன் கல்லூரியின் 17 வயதுக் குட்பட்டவர்கள் கிரிக்கெட் அணிக்கும், பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியின் 17 வயதுக் குட்பட்டவர்கள் கிரிக்கெட் அணிக்குமிடையே மொறட்டுவையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென் செபஸ்டியன் அணி முதல் இன்னிங்ஸில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றிக்கு சென் செபஸ்டியன் அணியின் வீரர் லக்தேவ பெரேரா முக்கிய காரணமாகவிருந்தார்.

சென் செபஸ்டியன் அணி முதல் இன்னிங்ஸில் 46 ஓவர்களில் 9 விக்கட் இழப்புக்கு 114 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்தேவ பெரேரா 58 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு ஆடிய பிரின்ஸ் ஒப் வேல்ஸ அணி 38 ஓவர்களில் சகல விக்கட்டுகளையுமிழந்து 85 ஓட்டங்களையே பெற முடிந்தது. (ந)

★

கொழும்பு, ஜூன் 29

லும்பினி ம.வி. 15 வயதுக்குட்பட்டவர்கள் கிரிக்கெட் அணிக்கும், சென் செபஸ்டியன் கல்லூரியின் 15 வயதுக்குட்பட்டவர்கள் கிரிக்கெட் அணிக்குமிடையே மொறட்டுவையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் லும்பினி அணி முதல் இன்னிங்ஸில் வெற்றிபெற்றது.

லும்பினி அணியின் இந்த வெற்றிக்கு டி. சுபாசனின் துடுப்பாட்டமும், எல். லலினின் பந்து வீச்சும் பெரிதும் துணை செய்தன.

லும்பினி அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையுமிழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய சென் செபஸ்டியன் அணி 131 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. (ந)

## மெய்வல்லுனர் போட்டிகள்

மாத்தறை, ஜூன் 28

விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் திஹகொடை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடத்தப்பட்ட வருடாந்த மெய்வல்லுனர் போட்டியில் நாய்ம்பல சுகத விளையாட்டுக் கழகம் 254 புள்ளிகளைப் பெற்று சாம்பியனாகியது.

மாத்தறை உயன்வத்தை விளையாட்டரங்கில் திஹகொடை உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கே. டபிள்யூ. திலகசிரி தலைமையில் இந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டியில் கபுதுவ சுபர் ஸ்டார் விளையாட்டுக் கழகம் 154 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், யட்டியன கோல்டன் விளையாட்டுக் கழகம் 114 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன. (ந-25)

## ஒலிம்பிக்கில் அங்கோலா கலந்து கொள்ளாது

லிஸ்பன், ஜூன் 28

லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அங்கோலா கலந்து கொள்ளாது.

எத்தியோப்பியாவைத் தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகளை பகிஷ்கரிக்கும் இரண்டாவது ஆபிரிக்க நாடு அங்கோலாவாகும். (ந)

## அநுராதபுரத்தில் கண்காட்சி வலைபந்தாட்டம்

கொழும்பு, ஜூன் 29

தேசிய வலைபந்தாட்ட சாம்பியன்களான கொழும்பு நகரசபை விளையாட்டுக் கழக அணி அனுராதபுரத்தில் கம் உதாவ பொருட்காட்சியின் போது கண்காட்சிப் போட்டி ஒன்றில் கலந்து கொள்ளும்.

எதிர்வரும் ஜூலைமாதம் 1 ஆம் திகதி தேசிய இளைஞர் சேவைகள் அணியுடன் கொழும்பு நகரசபை அணி போட்டியிடவுள்ளது.

நகரசபை அணியில் தேசிய வலைபந்தாட்ட வீராங்கனைகள் பலர் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (ந)

# பதுளை அணி பொலீஸ் அணியை தோற்கடித்தது

பதுளை, ஜூன் 28

பதுளை மாவட்ட உதை பந்தாட்டக் கோஷ்டிக்கும், அகில இலங்கை பொலீஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேக பூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில் பதுளை கோஷ்டி பொலீஸ் கோஷ்டியை 4–2 கோல்களால் தோற்கடித்தது.

பதுளை விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டியின் இடைவேளையின்போது பதுளை கோஷ்டி 2–1 கோல்களால் முன்னணியில் திகழ்ந்தது.

பொலீஸ் கோஷ்டி சார்பில் என். திருப்பதி, நிஹால் பெரேரா ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டனர்.

பதுளை கோஷ்டி சார்பில் ரஞ்சித் திசாநாயக்க இரண்டு கோல்களையும், பீ. விக்கிரமசூரிய, எஸ். ரட்ணயக்க ஆகியோர் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர்.

டபிள்யூ. ஏ. சந்திரரட்ண இப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (ந-37)

## தொலைபேசிகளை நிர்வகிக்க

# ஒதுக்கப்படும் பணம் போதவில்லையென செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

தொலைபேசிகளை நிர்வகிப்பதற்காக வருடாந்தம் ஆறு கோடி ரூபா தேவைப்படுவதாக தபால், தந்தி, தொலைத் தொடர்புகள் அமைச்சு அறிவித்திருக்கிறது.

ஆனல் தொலைபேசி நிர்வாகத்துக்காக அரசாங்கம் வருடம் ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாவையே ஒதுக்குகின்றது. அதனல் தொலைபேசி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்படி அமைச்சின் செயலாளர் திரு. ஏ. ஆர். எம். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இவ்வாறு வழங்கப்படும் பணத்தை இவ்வருடத்தில் மேலும் அதிகரிப்பதாக அரசாங்கம் உறுதியளித்தது. ஆனல் அரச செலவினங்களைக் குறைக்கும் இன்றைய நிலையில் மேற்படி தொகை அதிகரிக்கப்படமாட்டாது எனத் தாம் நம்புவதாகவும் திரு. ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார்.

தொலைத் தொடர்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக இவ்வாண்டு 48 கோடியே, 21 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. ஆயினும் நிர்வாக வேலைகளுக்காக 45 கோடியே 46 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

போதிய பணம் கிடைக்காத பட்சத்தில் தொலைபேசி [illegible] காத மார்க்கங்களைத் திருத்துவதில் தாமதம் ஏற்படும் எனவும் தொலைத் தொடர்பு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். (எ-11)

## கம்உதாவ: இலவச இலைக்கஞ்சி

கொழும்பு, ஜூன் 29

அனுராத புரத்தில் நடைபெற்று வரும் "கம் உதாவ" நிகழ்ச்சிகளை கண்டு ரசிக்க வருபவர்களுக்கு சுதேச வைத்தியத் துறை அமைச்சினல் இலவசமாக இலைக் கஞ்சி விநியோகிக்கப்படுகிறது.

"கம்உதாவ" நிகழ்ச்சியின் அரம்ப தினத்தன்று மட்டும் 2003 பேருக்கு கஞ்சி விநியோகிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (த-ர)

## 'வருடாந்த மாநாடு

கொழும்பு, ஜூன் 29

இலங்கைத் தேயிலை விற்பனையாளர்களின் வருடாந்த மாநாடு இன்று 29ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தோட்டத் தொழில் துறை அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ண-ர)

# பிரி. பிரஜையிடம் போதைப்பொருள்

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் இருந்து அம்ஸ்டடேம் நோக்கிப் பயணமாக இருந்த பிரிட்டிஷ் பிரஜை ஒருவரிடமிருந்து சுமார் 25,000 ரூபா பெறுமதியான "ஹசீஸ்" போதைப் பொருளை, விமான நிலைய பாதுகாப்பு பிரிவினர் கைப்பற்றினர்.

விமான நிலையத்திற்குள் வந்த இவரிடம் சுமார் 465 கிராம் ஹசீஸ் இருந்ததாகப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

விமான நிலைய மேலதிக சுங்கப் பரிசோதகரினல் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை தற்போது பொலீஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ண-7)

## காலிமுகத்திடலில் வழமைபோல் தொழுகை

கொழும்பு, ஜூன் 29

புனித நோன்புப் பெருநாள் தொழுகை, வழமைபோல் பெருநாள் தினத்தன்று காலை, கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறும்.

இலங்கை மேமன் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (ண-8)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

## இப்தார் ஏற்பாடு

பைத்துல் முகத்தஸ் தினத்தை முன்னிட்டு புத்தளம் மொஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் இன்று 29 ஆம் திகதி 1000 பேருக்கு நோன்பு திறப்பதற்கான விசேஷ "இப்தார்" நிகழ்ச்சி நடத்தப்படும்.

பைத்துல் முகத்தஸ் செயல் முன்னணி இதனை ஒழுங்கு செய்துள்ளது. (த-7)

# அநுராதபுரத்தில் நாசகார சுவரொட்டிகள்

கொழும்பு, ஜூன் 29

அரசாங்கத்தை கவிழ்க்குமாறு கோரும் நாசகார துண்டுப்பிரசுரங்களும் சுவரொட்டிகளும் அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

அமைச்சரவைப் பேச்சாளரும், கல்வி அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா இதனை புதன்கிழமை தெரிவித்தார்.

ஐக்கியப்பட்டு, தமது உரிமைகளைப் பாதுகாக்க முன்வருமாறு மாணவர்களைக் கோரும் துண்டுப் பிரசுரங்களைப் பொலீஸார் கைப்பற்றியிருக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக பொலீஸார் நடத்திய சோதனைகளின் போது இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, அநுராதபுரத்தில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அங்கு கம்உதாவ கொண்டாட்டங்கள் நடைபெறும் சந்தர்ப்பத்தை பாவித்து விப்லவகாரி எச்சத் பெரமுனே" என்னும் இயக்கம் இதனை விநியோகித்துள்ளது.

மேற்படி துண்டுப் பிரசுரங்களில் மூன்று முக்கிய விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

* பல்கலைக்கழகங்களிலிருந்து பொலீஸாரை அகற்றுதல்.

* மாணவர்களின் கொலைக்கு காரணமாயிருந்த அரசாங்கத்தை மாற்ற வேண்டும்.

* வடக்கில் இருக்கும் பயங்கர வாதத்தைப் போல் தெற்கிலும் ஆரம்பிப்போம்.

அப்பாவி பாடசாலை மாணவர்களைத் தூண்டிவிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்த இவர்கள் முயல்வதாகவும் திரு. ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

இந்தத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டவர்களின் பெயர், விலாசங்கள் அவற்றில் அச்சடிக்கப் பட்டிருப்பதால்; சம்பந்தப்பட்டவர்களை பொலீஸார் விசாரித்து வருகின்றனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ண-ய)

## தலைமன்னார் சுங்க பரிசோதனையில் புதிய மாற்றம்

பேசாலை, ஜூன் 27

தலைமன்னார் — இராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகளின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது. இதனை அடுத்து தலைமன்னார் துறை சுங்க அதிகாரிகள் சுங்க பரிசோதனை தொடர்பாக புதிய முறை ஒன்றை கடைப்பிடித்து வருகின்றனர்.

இதன்படி, இலங்கையில் இருந்து குடிபெயர்ந்து தாயகம் செல்லும் பிரயாணிகள் முதலில் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று கல்வி கற்கும் மாணவர்கள் இரண்டாவதாகவும், உல்லாசப் பிரயாணிகள் மூன்றாவதாகவும் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். (த-251)

விஞ்ஞானப் பட்டதாரி

# ஆசிரியர் பதவி விண்ணப்ப வயது எல்லை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 29

விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் செய்பவர்களின் வயது எல்லை நாற்பதாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இதுவரை 18 வயது முதல் 28 வயது வரை உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் வெளியான அரசாங்க வர்த்தமானியிலும் 28 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

புதன்கிழமை கூடிய கல்விச் சேவைகள் ஆணைக்குழு, 40 வயது வரையுள்ள விஞ்ஞான பட்டதாரிகளின் விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்வதென தீர்மானித்துள்ளது.

இந்த அடிப்படையில் 40 வயதை அடைந்த விஞ்ஞானப் பட்டதாரிகளும் தமது விண்ணப்பங்களை அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்ப கடைசித் திகதி இன்று 29ஆம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிப்பதற்காக மேலும் ஒருவார காலம் அவகாசம் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ண-ய)



தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி புதன் இரவு புதுடில்லி பயணமான போது, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட படம். வழிஅனுப்பு வைபவத்தில் கலந்துகொண்ட அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, வர்த்தக,கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

ரூபா 13 கோடி செலவில்

# கட்டுநாயக்கா விமான நிலையத்தை நவீனமயப்படுத்தத் திட்டம்

கொழும்பு, ஜூன் 29

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை நவீனமயப் படுத்துவதற்காக 13 கோடி ரூபா செலவிடப்படும்.

இதுவரை 17 உள்நாட்டு வெளிநாட்டு கம்பெனிகள் தமது கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்திருக்கின்றன. இந்தப் பதினேழு விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்படும் ஒரு நிறு

டை மார்ட்டா என ஏயர் லங்கா நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கட்டுநாயக்காவில் அமைக்கப் படவிருக்கும் 3,350 மீட்டர் நீளமான ஓடு பாதை நவீனமய

தாகவும் அமைக்கப்படும்.

விமான ஓடு பாதை விஸ்தரிக்கப்படவிருப்பதால் இப்பொழுது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அமைந்திருக்கும் இலங்கை விமானப்படைப் பிரிவுகளில் சில ரத்மலானை விமான நிலையத்திற்கு மாற்றப்படவிருக்கின்றதெனவும் அவர் தெரிவித்

## கொஸ்லந்தை நவீன பொலீஸ் நிலையம்

அப்புத்தளை, ஜூன் 28

அப்புத்தளைத் தொகுதியைச் சேர்ந்த கொஸ்லந்தையில் நவீன பொலீஸ் நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

இந்நிலையம் கொஸ்லந்தை வீடமைப்புத் திட்டம் அமைந்திருக்கும் காணியில் அமைக்கப்

# மேன்முறையீடு செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜூன் 29

கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சருக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை, எதிர்த்து மேன்முறையீடு செய்ய அவருக்கு உயர் நீதிமன்றம் புதனன்று அனுமதிவழங்கியது.

கண்டி வடக்கு போக்குவரத்து சபையில் பணிபுரிந்த சாரதி ஒருவருக்கு காயம் விளைவித்த குற்றச் சாட்டுக்கு பிரதி அமைச்சர் திரு. டபிள்யூ. எம்.ஜீ.ரீ. பண்டாவைக் குற்றவாளி என்று

நவீனமயப் படுத்துவதற் காக 13 கோடி ரூபா செலவிடப்படும்.

டினர் நிர்மாண வேலை களுக்கான கேள்விப் பத்திரங் களை ஏயர் லங்கா நிறுவனம் பரிசீலனை செய்து வருகின்றது.

பத்திருக்கின்றன. இந்தப் பதி னேழு விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்படும் ஒரு நிறு வனத்திடம் நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்படும்.

இனிமேல் வரும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்

கட்டுநாயக்காவில் அமைக்கப் படவிருக்கும் 3,350 மீட்டர் நீளமான ஓடு பாதை நவீனமய மானதாகவும் பாதுகாப்பான

களில் சில ரத்மலான விமான நிலையத்திற்கு மாற்றப்படவிருக் கின்றதெனவும் அவர் தெரிவித் தார். (ண-ய)

இந்நிலையம் கொஸ்லந்தை வீடமைப்புத் திட்டம் அமைந்தி ருக்கும் காணியில் அமைக்கப் படும்.

கொஸ்லந்தை – வெள்ளவாய கொஸ்லந்தை – அப்புத்தளை போன்ற நெடுஞ்சாலைகளிலும் கொஸ்லந்தையைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அடிக்கடி கொள்ளைச் சம்பவங்கள் நடை பெறுகின்றன.

இவற்றை அடுத்தே இங்கு

உயர் நீதிமன்றம் புதனன்று

பொலீஸ் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது.

சுதேச வைத்தியத்துறை அமைச்சரும், அப்புத்தளை எம். பியுமான திரு. டபிள்யூ. ஜே எம். லொக்கு பண்டார இதற் கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார். (எ-100)

டபிள்யூ. எம்.ஜீ.ரீ. பண்டார வைக் குற்றவாளி என்று கண்டி ஆரம்ப நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன், ரூபா 100 அபராதமும் விதித்திருந் தது.

இதனை எதிர்த்து பிரதி அமைச்சர் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறை யீடு செய்திருந்தார்.

மேன் முறையீட்டு நீதிமன் றம், ஆரம்ப நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிப் படுத்தித் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து வழக்கை மீள நிரல் படுத்து மாறு பிரதி அமைச்சர் தாக் கல் செய்த மேன்முறையீடு கடந்த மார்ச் 30 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டது.

எனினும் சட்டப் பிரச்சினை ஒன்றின் மீது பிரதி அமைச்சர் இந்தத் தீர்ப்பை எதிர்த்து தற்போது உயர் நீதிமன்றம் மேன்முறையீடு செய்ய விஷேட அனுமதிகோரி இருந்தார்.

இதற்கான அனுமதியையே தற்போது உயர் நீதிமன்றம் பிரதி அமைச்சருக்கு வழங்கியுள்ளது. (ண-8)

# அமைச்சரவை தீர்மானங்கள்

## ● நீரோட்ட அபிவிருத்தி

★ மகாவலி திட்டத்தின் "பி" வலதுகரை கீழ் நீரோட்ட அபிவிருத்தித் திட்டத்திற்கு, சவூதி அபிவிருத்தி நிதியம் 122 கோடியே 10 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இதற் கான ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவையி னல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

## ● ரயில்வே தொழில்நுட்ப பயிற்சி

★ ஜெர்மன் குடியரசின் நிதி உதவியுடன் 9 கோடி ரூபா செலவில் ரயில்வேக்கான தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் நிறுவுவதற்கும், நாலரை கோடி ரூபா செலவில் பெந்தொட்டை வெள்ளவத்தை ரயில் பாலங்களை மீளமைக்கவும், ஹிக்கடுவை யின் பாலத்தை திருத்துவதற்கும், போக்குவரத்து அமைச்சுக்கு, குறைநிரப்பு மதிப்பீட்டு தொகையாக 3,09,67,000 ரூபா வழங்கு வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## ● கப்பல் ஒப்பந்தம்

★ சைப்பிரஸ் குடியரசு, பல்கேரிய குடியரசு ஆகிய இரு நாடுகளுடனும் இலங்கை கப்பல் ஒப்பந்தங்களை செய்து கொள் வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இந்த ஒப்பந்தங்கள் மூலம் இலங்கையருக்கு, சைப்பிரஸ், பல்கேரிய நாடுகளின் கப்பல்களில் பணிபுரியும் வாய்ப்புகள் அதி கரிக்கும்.

## ● சீனி நிறுவனத்திற்கு கடன் வசதி

★ பெல்வத்தை சீனி நிறுவனத்திற்கு 1,27,07,500 பவுன் கடன் வழங்குவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் வழங்குவதற் கும் அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடன் தொகையை வார்ட்லி லண்டன் நிறுவனம் இலங்கை வங்கிக்கு ஊடாக வழங்குகிறது. இதனது வட்டி விகிதம் 9.5 வீதமாகும். இது 10 வருட கடனாகும்.

★ அரச தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை ஆகிய தோட்டங்களில் மினி மின் திட்டத்தை மேற்கொள்வதற்காக விலைக்கோரல் சபை ஒன்று நியமிக்கப்பட் டுள்ளது.

## ● மினி மின் திட்டம்

அரச தோட்டக் கூட்டுத்தாபன அமைச்சு, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை அமைச்சு, தோட்டக் கைத்தொழிற் றுறை அமைச்சு திறைசேரி ஆகியவற்றின் செயலாளர்கள் இச் சபையின் அங்கத்தவர்களாக இருப்பர்.

அரச தோட்டக் கூட்டுத்தாபன அமைச்சின் செயலாளர் இதன் தலைவராக பணிபுரிவார்.

## ● தார் இறக்குமதிக்கு அனுமதி

★ நெடுஞ்சாலை திணைக்களத்திற்கு இடைக்கால தேவைக் கென 30 ஆயிரம் பரல் தார் ("பிற்றுமின்") இறக்குமதி செய்ய அனும திக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு 3 கோடி ரூபா செலவாகும். இதேவேளை கைவசம் வைத்திருப்பதற்கு ஏதுவாக தாரை இறக்குமதி செய்வதற்கும் நெடுஞ்சாலை திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக் கிறது.

இதற்கென ஒரு விலைக்கோரல் சபையும் நியமிக்கப்பட்டி ருக்கிறது. (ண—ய)

# மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்

## உள்நாட்டில் உற்பத்தி

கொழும்பு, ஜூன் 29

மோட்டார் வாகனங் களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை, உள் ளூரிலேயே உற்பத்தி செய் யும் புதிய திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் உற் பத்தி அபிவிருத்தித் திணைக்கள மும், லங்கா அசோக் லேலண்ட் நிறுவனமும் இணைந்து இக் கூட்டு முயற்சியை மேற்கொள் ளும்.

விஞ்ஞான கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. ஜஸ்டிஸ் டயஸ் புதனன்று நடை பெற்ற செய்தி நிருபர்கள் மாநாட்டில் இதனைத் தெரிவித் தார்.

தற்பொழுது மோட்டார் வாகனங்களுக்கான 250 வகை யான உதிரிப் பாகங்களை இங் கேயே உற்பத்தி செய்ய முடி யும் எனத் தெரிவிக்கப்பட்டிருக் கிறது.

இவற்றுள் சைலன்சர்கள், கேஷ்கட், பீடிங் பெப்ரிகேட்டர் கள் என்பன குறிப்பிடத்தக்கன.

உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்ய முன்வரும் தனியார் நிறு வனங்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளையும், உற்பத்தி சம்பந்தமான ஆலோ சனைகளையும், லங்கா அசோக் லேலண்ட் நிறுவனமும், அமைச் சின் உற்பத்தி அபிவிருத்திப் பிரி வும் வழங்கும்.

உள்ளூரில் உள்ள மூலவளங் களைக் கொண்டு மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை உற் பத்தி செய்வதால் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என திரு. ஜஸ்டின் டயஸ் தெரிவித்தார். (ண-ய)

# பல்கலை மாணவர் இருவர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 28

கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப் பட்ட யாழ். பல்கலைக் கழ கத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களில் இருவர் விடுதலை செய்யப்பட்ட னர்.

சலாவுதீன், சந்திரகுமார் ஆகிய இருவரும் விடுதலை செய் யப்பட்டனர். கேதீஸ்வரன் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக் கழக உப வேந்தர் திரு. சு. வித்தியானந் தன், மேலதிகாரிகளுடன் நடத் திய பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னரே இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். (ண-ங-120)

# 4 கட்சிகளுக்கு பிரதமர் அழைப்பு

## மாணவர் பிரச்சினை பற்றி பேச

கொழும்பு, ஜூன் 29

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, லங்கா சம சமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மஹ ஜன எக்சத் பெரமுனே, ஸ்ரீ லங்கா மஹஜன கட்சி ஆகியவற்றை பல்கலைக் கழகத் துப்பாக்கிச் சூட் டுச் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு அழைத் திருக்கிறார்.

பல்கலைக் கழகத் துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு மாணவர்கள் மரண மானது குறித்தும், பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டிருப்பது குறித்தும் எதிர்ப்புத் தெரிவித்து இந்த நான்கு கட்சிகளும் பிர தமருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தன.

எதிர்வரும் சனிக்கிழமை 30 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு அனுராதபுரத்தில் வைத்து இதுபற்றி சந்திக்கப் பேசுவதற்கு பிரதமர் நான்கு அரசியல் கட்சிகளையும் அழைத் திருக்கிறார்.

கடிதத்தில் ஒப்பம் இட்டி ருக்கும் தலைவர்களுக்கு அனுரா தபுரம் வந்து போவதற்கான இலவச போக்குவரத்து வசதி களை அளிக்கவும் பிரதமர் முன் வந்திருக்கிறார். (ண)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1984 ஜூன் 27 இல்,

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2516.25 | ரூ. | 2517.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1984 ஜூன் 27 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2515.45 | ரூ. | 2518.55 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 3404.99 | ரூ. | 3415.43 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 902.40 | ரூ. | 909.18 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 294.20 | ரூ. | 299.00 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. | 10.5686 | ரூ. | 10.6574 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்திமூல நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்

| | | ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் | | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 99.68 | ரூ. | 100.08 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 307.69 | ரூ. | 308.91 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 28.36 | ரூ. | 28.48 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 227.19 | ரூ. | 228.15 |
| 100 நேபாள ரூபா | ரூ. | 156.03 | ரூ. | 156.65 |
| 100 பாகிஸ்தான் ரூபாய் | ரூ. | 181.91 | ரூ. | 182.67 |

தூரமான
22 கரட் தங்க
நகைகளுக்கு...



ஏ. கே.
கோல்ட் ஹவுஸ்
இல. 79, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி:– 28991 — 33712

தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசு ரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பன வாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத் திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613 வெளியிட்ட திகதி 29 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1 2 P. O. Box 1613.